


**HELLO MOBILE WORLD**

122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050



அறைவு 03 இயம் 18 November 29 - December 05, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 16 விலை : 30.00



**STUDIO ABISHA**



Professional Video & Photo Graphers

SA



NO.259 Central Roat, Trincomalee.
0262226842/0772302658/0776617791
abishadigital@gmail.com



# யாருக்கு ஆதரவு?

**டிசம்பர் 08**

சனாதிபதித் தேர்தலில் யாருக்குத் தமது ஆதரவை நல்குவதென்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டிசம்பர் மாதம் 8ம் திகதி வெளியிடும் என்ற செய்தியொன்று வெளியாகியுள்ளது.

பல்வேறு கட்சிகளும் அமைப்புக்களும் வெளிப்படையாகத் தமது ஆதரவுக் கரங்களை இரு பிரதான வேட்பாளர்களை நோக்கி வெளிப்படையாக நீட்டியுள்ள இந் நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்சும் யாருக்கு வாக்களிப்பது என்பது பற்றி ஆலோசனைகளை மேற்கொண்டு ள்ளன.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தனது நிலைப்பாட்டைத் தற்போதுவரை வெளிப்படையாகத் தெரிவிக்காத நிலையில் சில நாட்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர்களில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந்திரன் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபடாது. எனினும் ஜனநாயகம் மற்றும் 13



## அவுஸ்திரேலியா செல்லும் முயற்சிகள் மீள்கின்றன?

அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாகச் செல்லும் முயற்சிகளுக்குப் புத்துயிர் அளிக்கப்படுவதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

கிறிஸ்மஸ் நாட்களில் அவுஸ்திரேலி-யாவிற்குள் இலகுவாக உள்நுழையலாம் என்ற தவறான ஆசைகளைக் காட்டி சிலர் மக்களைத் திரட்டி வருவதாகவும் அவர்கள் கிழக்கின் கடற்கரைகளில் இருந்தும் பயணிக்கும் வாய்ப்பிருப்பதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாரத்தில் 13

## கணிதபாட வினாத்தாளில் கணக்கற்ற பிழைகள்

திருகோணமலை வலயக் கல்விப் பணிமனையின் பரீட்சைச் சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப்பட்ட கணிதப் பரீட்சையில் எண்ணிக்கணக்கற்ற பிழைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கல்விப் பொதுத்தராதரப்பத்திர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களே இப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. 13

$$\frac{1}{x} + \frac{1}{x} = \frac{1}{x}$$

????

## மக்கள் குறைகேள் அலுவலகத்தில் முறைப்பாடு

## படையினரின் தேவைக்குப் பகிரப்படவுள்ள கோபாலபுரம் காணிகள்

கோபாலபுரத்திலுள்ள கடற்கரைக் காணிகளில் அமைந்துள்ள கடற்படைத் தளங்களிற்குத் தேவையான காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய காணிகளைக் கையகப்படுத்தும் சட்டத்தின் 460 பக்கத்தின் பிரிவு 10ற்கு அமைய காணிகளைக் கையகப்படுத்தப்போவதான அறிவிப்பை குச்சவெளிப் பிரதேசச் செயலாளர் 13



**20 பக்கங்களில் மலைமுரசு**

தனியொரு பக்கத்தில்
மட்டக்களப்புச் செய்திகள்.....
வாராந்த அரசியல் ஆய்வு...
கிழக்கு மாகாண
அரசியல் கண்ணோட்டம்....
மாணவர் மலர்....
இன்னும் பல... காத்திருங்கள்....
000 விலையில் மாற்றமில்லை 000

## வெள்ளத்தில் சேனையூர் மத்திய கல்லூரி



கிழக்கில் பெய்துவரும் அடை மழை காரணமாக பெரும்பாலான பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கி 13


**கடையுடன் காணி விற்பனைக்கு!!**

இல 68 கண்டி வீதியில்
றோயல் கொன்ஸ்ரக்சனுக்கு
அருகாமையில் அமைந்துள்ள கடையுடன் கூடிய
வீடு விற்பனைக்கு உண்டு - 071 8496 977



**Sugirtha Stationers**



காகிதாதிகள் மொத்த மற்றும்
சில்லறை விற்பனையாளர்கள்
378/380 Court Road, Trincomalee
026 2225699 - 0775151336

அரச அங்கீகாரம் பெற்ற
வினியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 026 2227677

## மௌனம் – எப்போதுமே சாத்தியமா?

கிழக்கு மற்றும் தேசம் சார்ந்து இரண்டு முக்கிய விடயங்கள் நிகழ்ந்தேறியுள்ளன.

முதலாவது, கிழக்கு மாகாணத்தில் தனியொரு மாவட்டத்தை முஸ்லிம்களின் மாவட்டமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருந்தது.

இக்கோரிக்கையை அடுத்து பிரதான கட்சிகள் யாவும் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியதுடன் அக் கோரிக்கையின் சாதக பாதக நிலைகள் தொடர்பாகவும் கடும் கருத்தாடல்கள் வெளிப்படத் தொடங்கின.

அச்சந்தர்ப்பத்தில் மற்றொரு தேசிய நிகழ்வு வெளிக்கிளம்பியதால் தனி மாவட்ட வாதப் பிரதி வாதங்கள் அமுங்கி விட்டன.

அந்தத் தேசிய நிகழ்வு சனாதிபதி தேர்தலுக்கான அழைப்பாகும்.

இதனையடுத்து ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் சனாதிபதி வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். எதிர்பாரதுதைப் போலவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் தற்போதைய சனாதிபதி போட்டியிட முன்வர, எதிர்க்கட்சிகளின் சார்பில் தற்போதைய சனாதிபதியின் கைகளுக்கு மிக அருகில் இருந்தவரும் சுதந்திரக் கட்சிக்காகச் சிறுவயதில் இருந்தே உழைத்து வருபவருமான மைத்திரிபால ஸ்ரீசேன திடீரென சனாதிபதி வேட்பாளராக அறிமுகமானார்.

மேற்போந்த இரண்டு அரசியல் நிகழ்வுகளும் வடக்குகிழக்கு தமிழர்களின் வாழ்வியலில் மிக முக்கியமானவை.

மாவோ சேதுங் கூறியதைப் போல சாதாரண மனிதனின் அன்றாட வாழ்வின் நிமிடங்களைக் கூட அரசியலே தீர்மானிக்கின்றது என்ற சொற்களுக்கு ஏற்ப இவ்விரு அரசியல் நிகழ்வுகள் தொடர்பாகவும் தமிழர்கள் தமது அரசியல் நிலைப்பாட்டை வெளிக்கொணர வேண்டிய தேவை எழுந்துள்ளது.

ஆனால் இவ்விரு நிகழ்வுகள் தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தாது மௌனம் சாதித்தே வருகின்றது.

தந்திரோபாய மௌனம் என்பது பேசப்படும் வார்த்தைகளை விடப் பலமானது என்பது உண்மையே. என்றாலும் மௌனமே மொழியானால் அரசியலில் அது முட்டாள்தனமாகி விடும்.

சனாதிபதி வேட்பாளர் தொடர்பாக த.தே.கூவின் மௌனம் தந்திரோபாயம் மிக்கதே! ஏனெனில் இனவாத அரசியல் மேலோங்கி நிற்கும் இந்த வேளையில் நாட்டைத் துண்டாடுதல் என்னும் வார்த்தை அல்லது நாட்டைக் காட்டிக்கொடுப்பதா? என்ற கேள்வியுடன் கூடிய பிரசாரம் ஏனைய அனைத்து விடயங்களையும் பின்தள்ளக்கூடியது.

இவ்வார்த்தையை யார் பாவிப்பது? என்பதை த.தே.கூவின் ஆதரவே தீர்மானிக்கும். எனவே அவ்வாறான நிலையில் த.தே.கூ வின் மௌனம் தந்திரோபாயம் மிக்கதே...

ஆனால் கிழக்கு மாகாணத்தில் தனியானதொரு முஸ்லிம் மாவட்டத்தை உருவாக்க எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பாக மௌனம் சாதிப்பது பொருத்தமானதா?

ஏற்கனவே பல கூறுகளாகத் துண்டாடப்படும் கிழக்கு மாகாணத்தில் தனி மாவட்டக் கோரிக்கை செலுத்தும் தாக்கம் எத்தகையது என்பதும் அதன் கள நிலவரம் என்ன? என்பதும் ஆராயப்பட வேண்டிய விடயமாகின்றது. அண்மையில் அம்பாறைத் தமிழர் பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்றில் அங்கு தமிழர்களின் பூர்வீகம் சிதைக்கப்பட்ட வரலாற்றுக்கும் முஸ்லிம்களுக்கு உள்ள தொடர்புக்கும் இடையேயான மனந்திறந்த பதிவுகள் முன்வைக்கப்பட்டன. அதனை உணர்ந்து தமிழ்த் தலைமை தனி மாவட்ட கோரிக்கைக்கான தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும்... அவ்விடயம் தொடர்பான மௌனம் முட்டாள்தனமானதா? அல்லது தந்திரோபாயமானதா? என்பதைத் தமிழர்களும் சிந்திக்க வேண்டும்..... சிந்திப்பார்களா?

-மாயன்-

## ரூபா 250.00 பெற 15 கிலோ மீற்றர் பயணம்!!!

திருகோணமலை மூதூர் கிழக்கு எல்லைக் கிராமங்களான பாட்டாளிபுரம் மலைமுந்தல் இளக்கந்தை மற்றும் நீலாக்கேணி நல்லூர் போன்ற கிராமங்களில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் பொது சன மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனவு பணத்தை பெற 15 கிலோ மீற்றர் தூரம் நடந்தும் ஏனைய தனியார் வாகனங்களிலும் பயணம் செல்வதனால் தாம் பெறும் 250 ரூபாய் பணம் முழுமையாக செலவாகின்றது என உதவிப் பணம் பெறும் மக்கள் கவலையடைகின்றனர்.

இவ்வாறு எவ்வித வாழ்வாதார உதவிகளும் இன்றி உள்ள 300 பேருக்கு மேற்பட்ட மக்கள் இப் பகுதிகளில் இருந்து கட்டைப்பறிச்சான் உப தபால் அலுவலகத்திற்கு வந்து இப்பணத்தை பெறவேண்டியுள்ளது. முச்சக்கரவண்டிப் பயணத்திற்கு 1000 ரூபாய் செலவாகிறது எனத் தெரிவித்த அவர்கள் உடல் நலம் குறைந்த நிலையில் பயணிக்க முடியாதவர்கள் யாரிடமாவது கொடுத்து அப்பணத்தை பெற முயற்சித்தால் அவர்களுக்கும் 50 ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது என்றனர். அவர்களிற் சிலரிடம் மாதாந்தச் சேமிப்பு என நூறு ரூபா ஏன் அறிவிடப்படுகின்றது என்றும் தெரியவில்லையாம்.

இவ்விடயம் தொடர்பாக மூதூர் பிரதேச செயலாளர் மற்றும் அஞ்சல் திணைக்கள அதிகாரிகளுக்கு இந்த பணத்தை தமது கிராமத்தில் கொண்டு வந்து தந்துதவுமாறு மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டும் சாதகமான தீர்வு எதும் இதுவரை எட்டவில்லை என்பதுடன் கட்டைப்பறிச்சான் உப அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்களும் இதில் கவலையீனமாக இருப்பதாக இக்கிராம பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (விசேட நிருபர்)

## வாசிப்பு மாத அழைப்பை ஆங்கிலத்தில் அச்சிட்டு அசத்திய தமிழ் பிரதேசசபை




வாசிப்பு மாத நிகழ்ச்சிகளை நடாத்திய திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசபை அதன் அழைப்பிதழைத் தனி ஆங்கிலத்தில் அச்சடித்துள்ளது.

கலந்து கொண்டவர்கள், அதிதிகள் மற்றும் நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழ் சார்ந்திருக்க அழைப்பிதழ் மட்டும் ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டது ஏன் எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதுடன் பிரதேசசபையிலுள்ள பெரும்பான்மைத் தமிழ் மக்களுக்கு ஆங்கிலத்தில் வாசிக்க முடியுமா? என்பதைப் பற்றி யாரும் கவலை கொண்டதாகத் தெரியவில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

தமிழ்ப் பிரதேசச் செயலகங்கள் சில சாகித்திய விழா அழைப்பிதழில் சிங்கள மொழிக்கு முதன்மையைக் கொடுத்து பின்னர் தமிழ் மொழிக்கு இடம் கொடுத்துவரும் நிலையில் இப்பிரதேசசபை ஆங்கிலத்தில் மட்டும் அழைப்பிதழை வெளியிட்டது நன்று எனச் சிலர் கருத்தைத் தெரிவித்தனர்.

## பள்ளத்தில் வீழ்ந்த குழந்தைகள் பலி


திருகோணமலை, சேருநுவர பகுதியில் குழியொன்றில் விழுந்து இரு குழந்தைகள் உயிரிழந்த சம்பவமொன்று வியாழக்கிழமை (27) காலை 8.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில், தலைசிங்கம் சதுப்பியா (இரண்டரை வயது) மற்றும் தங்கேஸ்வரன் சாதனா (2 வயது) ஆகிய இரு குழந்தைகளே இவ்வாறு உயிரிழந்துள்ளன.

சேருநுவர, இறங்குதுறை, முகத்துவாரம் பகுதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேற்படி குழந்தைகள், அவர்களது வீட்டுக்கு பின்னால் விளையாடிக்கொண்டிருந்த போது, அங்கிருந்த தண்ணீர் நிரம்பிய குழியொன்றுக்குள் விழுந்துள்ளனர்.

## அமானாவின் கிளை மூதூரில்!

அமானா தகாபுல் நிறுவனத்தின் 27வது கிளை மூதூரில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஜே.எம்.லாஹிர் , மூதூர் பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.ஹரீஸ் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி திறந்து வைப்பதை படத்தில் காணலாம். படம் - சேனையூர் நிருபர்



## நந்தகுமாரின் முன்மொழிவில் வேலைத்திட்டங்கள்

மீனவர்கள் மற்றும் நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் செறிந்து வாழும் மனையாவெளிப் பிரதேசத்தில் தெருவிளக்குகளைப் பொருத்தவும் தெருக்களைத் திருத்தவும் திருகோணமலை நகர சபை அங்கத்தவர் நந்தகுமார் மேற்கொண்ட முன்மொழிவுகளின் பலனாக வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.


ரூபா 360,000.00 செலவில் நீதிமன்ற வீதியில் உள்ள இரண்டாவது தெருவும், ரூபா 295,000 செலவில் மனையாவெளி பாலமுருகன் கோவில் வீதியும் திருத்தப்பட்டுள்ளன.

திருத்தப்பட்ட தெருக்களுக்கு தெரு விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## நகரசபையில் வாசிப்பு மாத நிகழ்வு

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திருகோணமலை பொது நூலகத்தில் மாணவர்களுக்கான அறிவுசார் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்புவிழா கடந்த 27 மாலை 3.30 மணிக்கு பொது நூலகமண்டபத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை நகரசபைத்தலைவர் க.செல்வராஜா, செயலாளர் நபீல், நகரசபை உறுப்பினர் கௌரிமுகுந்தன், பிரதமநூலகர் வயலட் எதிரிசூரிய ஆகியோர் அதிதிகளாகக் கலந்திருந்தனர். வெற்றி பெற்றவருக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.. (அச்சுதன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த மைத்திரிபால

மூலம் : Ceylon Today
தமிழில் : மாயன்



**"எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகத் திடீரெனக் களமிறங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால ஸ்ரீசேனவின் அரசியல் வரலாறு பல விட்டுக்கொடுப்புக்களுடன் பயணித்துள்ளது"**

1960ம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சீரமைப்பைச் செய்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கட்சியை முன்னிலைப்படுத்திச் செயற்படுமாறு இராசரட்டையைச் சேர்ந்தத சி.பி.டி சில்வாவை வேண்டினார். அதனை ஏற்றுக்கொண்ட, பொலன்னறுவையைப் பிரதிநிதித்துவப்படுத்திய சி.பி.டி.சில்வா பாராளுமன்றில் பிரதி பிரதமராகச் செயற்படத்தொடங்கினார்.

பாராளுமன்றில் அவரே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராகவும் செயற்பட்டார். ஆனால் சிபியை ஸ்ரீமாவோ பெரிதாகக் கவனிக்கவில்லை. அதற்குக் காரணம் ஸ்ரீமாவோவின் மருமகன் பீலிக்ஸ் டயஸ். தன்னைவிட பீலிக்ஸ்சிற்கு முக்கியத்துவம் தரப்படுவதைக் கண்கூடாகக் கண்டுகொண்ட சிபி 1964ல் கட்சி தாவினார். ஐக்கிய தேசியக் கட்சி அவரை வாரிக் கொண்டது. ஆட்சி சரிந்தது.

இதே வேளை 1970 தொடக்கம் 1977 வரையான காலப்பகுதியில் துணைப்பிரதமராகப் பதவி வகித்த, இராசரட்டையின் மற்றொரு பாராளுமன்ற உறுப்பினரான மைத்திரிபால சேனநாயக்க, ஸ்ரீமாவோ வெளிநாட்டுப்பிரயாணங்களை மேற்கொண்ட போதெல்லாம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராகவும் பதில் பிரதமராகவும் பணியாற்றி வந்தார்.

ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து ஸ்ரீமாவோவின் குடியுரிமை பறிக்கப்பட்டது. அவ்வேளையில் அனுர பண்டாரநாயக்கவின் ஆதரவுடன் மைத்திரிபால கட்சியின் தலைமைப்பதவியைக் கோரியபோதும் ஸ்ரீமாவோ தனது மகள் சந்திரிக்கா மற்றும் மருமகன் விஜேகுமாரணதுங்க ஆசியோரின் மீது ஆதரவுடையவராக இருந்தார். அதையடுத்து 1982ம் ஆண்டில் மைத்திரபால சேனநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியயை உடைத்துக்கொண்டு ஐக்கிய தேசிக் கட்சியின் வசமானார். எனினும் 1984ல் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு மீண்டு தேர்தலில் போட்டியிட முயற்சித்த போது அவருக்கு தேசியப் பட்டியலில் மட்டுமே பெயரிட கட்சித் தலைமை முடிவு செய்திருந்தது.

மைத்திரிபால சேனநாயக்கவின் பின்னர் இராசரட்டையில் இருந்து உதயமானவர்தான் மைத்திரிபால ஸ்ரீசேன. அவர் 2001ம் ஆண்டில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். 2004ம் ஆண்டில் அவரை சந்திரிக்கா பண்டாரநாயக்க பிரதமராக நியமிக்க முன்வந்தார். எனினும் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்த ஸ்ரீசேன தனக்குப் பதிலாக மஹிந்தவைப் பிரதமராக ஆக்குமாறு முன்மொழிந்தார். பிற்காலத்தில் மஹிந்த சனாதிபதியானார்.

2010ம் ஆண்டில் மைத்திரிபால ஸ்ரீசேன தனது தேர்தல் பணிகளை "மைத்திரியின் வயதுடன் ஆரம்பிப்போம் - "Let us begin with Maithiri Age" என்ற தலைப்புடன் ஆரம்பித்தார். எனினும் அவருக்கு பிரதமராகும் வாய்ப்புக் கிட்டவில்லை. அதற்காக அவர் காத்திருந்தார். எனினும் அதற்குள் அவர் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகிவிட்டார்.

மைத்திரிபால ஸ்ரீசேனவின் முதலாவது சிறந்த பண்பு எப்போதுமே தனது கட்சியின் தலைவர்களுக்குத் தோள் கொடுப்பவராகவே பாடுபட்டார். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைப் புறக்கணித்த 1980களில் அனுர பண்டாரநாயக்க எதிர்க்கட்சிகளின் தலைவராக அமர்ந்தார். அக்காலத்தில் ஸ்ரீசேன சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினராக இருந்தார். அப்போது அவர் அனுர பண்டாரநாயக்கவின் அலுவலகத்தில் கடமையொன்றைப் பொறுப்பேற்றுச் செயலாற்றியும் வந்தார். அக்காலத்தில் யாரை சனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவது என்பது தொடர்பாக நடைபெற்ற நீண்ட விவாதங்களின் பின்னர் அன்றைய தினம் மத்திய குழு உறுப்பினர்களின் வாக்களிப்பில் அவ் வேட்பாளரைத் தெரிவது என்று தீர்மானமானது. ஏனெனில் சுதந்திரக் கட்சியின் தலைமை ஒருவரையும் அனுர பண்டாரநாயக்க வேறொருவரையும் சனாதிபதி வேட்பாளராகப் பிரேரித்தமையே இதற்குக் காரணம் ஆகும். அவ்வாக்களிப்பில் தனது அலுவலகத்தில் பணியாற்றும் ஸ்ரீசேன தான் முன்மொழிந்தவருக்கே ஆதரவாக வாக்களிப்பார் என அனுர பண்டாரநாயக்க நினைத்திருந்தார். ஆனால் நடந்ததோ வேறு. அதனையடுத்து ஸ்ரீசேனவை அனுர தனது அலுவலகப் பதவியில் இருந்து இடைநிறுத்தினார். எனினும் கட்சித் தலைமை அவரைக் காத்தது.

அவ்வாறே மங்கள சமரவீரவிற்கு எதிராக மஹிந்த ராசபக்ச நடவடிக்கையை முன்னெடுத்த போது ஸ்ரீசேன மஹிந்தவிற்கே ஆதரவு வழங்கினார்.

ஸ்ரீசேனவின் இரண்டாவது சிறந்த பண்பு தவறானவற்றிற்கு எதிராக தயக்கமின்றிக் குரல் கொடுப்பதே!

சீன சார்புக் கம்யூனிசக் கொள்கை கொண்ட சண்முகதாசனின் கட்சியின் கொள்கைப் பிரகடனங்களால் ஈர்க்கப்பட்ட 16 வயது இளைஞனான ஸ்ரீசேனாவிடம் தவறுகளை தட்டிக்கேட்கும் பண்பு மிகஅதிகமாகக் காணப்பட்டது.

மைத்திரிபால ஸ்ரீசேனாவைத் தேடிவந்த வாய்ப்பான பிரதமர் பதவியை அவர் ஏற்க மறுத்து மஹிந்த ராசபக்சவிற்கு வழங்குமாறு 2004ம் ஆண்டு சந்திரிகா சனாதிபதியான போது ஸ்ரீசேன கோரியியருந்தார்.

அன்றைய நாளில் பொலனறுவையில் இருந்து விசேட உலங்குவானூர்தி மூலம் ஸ்ரீசேனாவை சந்திரிக்கா சனாதிபதி அலுவலகத்திற்கு அழைத்துவந்தார். அங்கு சனாதிபதியுடன், பாலபட்டபெந்தி மற்றும் லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோர் இருந்தனர். அவர்களின் முன்நிலையிலேயே மைத்திரி மேற் சொன்ன முடிவை முன்வைத்தார். எனினும் அச்சந்தர்ப்பத்தில் மஹிந்தவின் பிரதமர் நியமனத்தை ஜேவிபி கடுமையாக எதிர்த்து வந்ததைக் காரணம் காட்டி ஸ்ரீசேனவை பிரதமராக ஆகுமாறு கதிர்காமர் வேண்டுகோள் விடுத்தார்.

எனினும் சிறிசேன அதை மறுத்து அவ்விடயம் தொடர்பாகக் கோபம் கொண்டிருந்த கதிர்காமரையும் சாந்தப்படுத்தினார் ஸ்ரீசேன.

மஹிந்தவையும், கதிர்காமரையும் தவிர்த்து பிரதமராக மாறும் வாய்ப்பு ஸ்ரீசேனவிற்கு வந்த போதும் அதை அவரே விட்டுக்கொடுத்திருந்தார்.

இன்று அவர் எதிர்கட்சிகள் அனைத்தினதும் பொது வேட்பாளராகக் களம் இறங்கியுள்ளார்.

இவர் தான் மைத்திரிபால ஸ்ரீசேன...

# ஆங்கில இணையத்தளச் செய்திகள்

## புதிய வரிகள் - சூதாட்ட விடுதி மன்னனுக்கும் தடை?

அவுஸ்திரேலிய சூதாட்ட விடுதி மன்னனான ஜேம்ஸ் பார்க்கரால் இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டுத் திட்டம் பல்வேறு தடைகளை எதிர்கொண்டுள்ளது.

2015ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள சூதாட்ட வர்த்தக வரிகளே அத்தடைக்கு முக்கிய காரணமாகின்றன.

சூதாட்ட விடுதிகளுக்கான அனுமதிக்கட்டணமாக உள்நுழையும் ஒருவர் 100 டொலர்களைச் செலுத்த வேண்டும் என்பதும் சூதாட்ட வரி 10 வீதமாக இருக்கும் என்பதும் 2015 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் ஆகும்.

ஆசிய நாடுகளின் மத்திய தரவர்க்க மக்களையும் சூதாட்ட வர்த்தகத்திற்குள் உள்ளீர்க்கும் வகையிலேயே தனது வர்த்தகச் செயற்பாடுகளை விரிவடையச் செய்வதாக கடந்த ஒக்டோபர் மாதம் ஜேம்ஸ் பார்க்கர் தெரிவிருந்தார்.

(த ஒஸ்ரேலியன் மோர்னிங் ஹெறால்ட்)

## தேர்தலுக்கு முன்பிருந்தே இலங்கை மீது கண் வையுங்கள்

இலண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் அம்னஸ்டி மனித உரிமையகமானது ஐக்கிய நாடுகள் சபையிடம் இலங்கை தொடர்பாகக் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது.

அக்கோரிக்கையில் இலங்கையை தேர்தலுக்கு முன்பிருந்தே மிக நெருக்கமாக ஐ.நா கண்காணிக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கையில் தேர்தல்களின் போதான வன்முறைக் கலாசாரமானது பல்லாண்டு பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது எனத் தெரிவித்துள்ள அம்னஸ்டி இந்தத் தேர்தலின் போது தேர்தல் வன்முறைக்கலாசாரமானது சிறுபான்மையினருக்கு எதிராகக் கிளம்பும் வாய்பைக் கொண்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது. (கொழும்பு கசட்)

## டயலொக் மீது சட்ட நடவடிக்கை

இலங்கையின் தொலைத்தொடர்பு நிறுவனங்களில் ஒன்றான டயலொக் கம்பனி மீது சட்ட நடவடிக்கை எடுக்கச் சுமார் 100 பேர் கொண்ட குழுவொன்று தயாராகியுள்ளது.

அண்மையில் சிரச தொலைக்காட்சியின் அரசியல் கள [illegible] ஒளிபரப்புப் [illegible] போது [illegible] நடவடிக்கைக்கு இக்குழு தயாராகிவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவல்துறைக்கு கட்டளைகள்

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை முன்னிட்டு காவல்துறையினருக்கு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளரான முன்னால் காவல் மா அதிபரால் நடாத்தப்பட்டுள்ள விசேட கூட்டமானது கவனத்தை ஈர்த்துள்ளது.

தற்போதைய காவல் மா அதிபருக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள இந் நடவடிக்கையை சட்ட ஒழுங்கு அமைச்சின செயலாளர் தன்னிச்சையாகக் கையேற்று கடந்த 26ம் திகதி உதவிக்காவல் அத்தியட்சகர் தரத்திற்கு மேற்பட்ட தரங்களைக் கொண்ட காவல்துறை உயர் அலுவலர்கள் யாவருக்கும் இக் கூட்டம் செயலாளரால் நடத்தப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தின் போது தேர்தல் வன்முறைகள் என வரும் முறைப்பாடுகளை முதலில் உரிய பிரதேசத்திற்குப் பொறுப்பான உதவிக் காவல் அத்தியட்சகரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று தெரிவித்துள்ள செயலாளர் உதவிக் காவல் அத்தியட்சகர் அம் முறைப்பாட்டைப் பதிவு செய்யலாமா? இல்லலையா என்பது தொடர்பாக முடிவுகளை எடுத்த பின்னரே காவல்துறை அம்முறைப்பாட்டைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் ஓர் கட்டளை இடப்பட்டுள்ளது.

(லங்கா ஈ நியூஸ்)

அரசியல் ஆய்வு

-- அ.நிக்சன் --

# பொது வேட்பாளர் வெற்றி பெற்றால் தேசிய அரசாங்கம் அமையுமா?


## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீட்கும் போரில் – சந்திரிக்கா குமாரதுங்க



முரண்பாட்டிலும் ஓர் உடன்பாடு என்ற அடிப்படையில் செயற்படும் பொது எதிரணியின் அரசியல் நகர்வுகள் தென்பகுதியில் புதிய அரசியல் கலச்சாரத்தை உருவாக்கலாம். ஆனால் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்ந்தும் இருட்டறைக்குள் இருக்கும் ஆபத்து.

பொது வேட்பாளர் வெற்றிபெற்றால் ஆறுமுகன், டக்ளஸ், ஹக்கீம், கருணா, றிஷாட் பதியுதீன் ஆகியோரை அழைத்து அமைச்சுப் பதவி கொடுத்து மீண்டும் அந்த அரசியலை தொடருவாரா? ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீட்கும் போரில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா







ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் யார் என்பதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச போட்டியிட்டு மூன்றாவது முறையாகவும் வெற்றிபெறுவாரா இல்லையா என்பதும்தான் தற்போது எல்லோருடைய பேச்சாகவும் உள்ளது. இலங்கையில் தேர்தல் என்றாலே அரசியல் வாதிகள் கட்சி மாறுவதும் எதிர்க்கட்சிகள் ஒன்று சேருவதும் வழமை. வேட்பு மனுத் தாக்கல் முடிவடையும் வரை எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று தெரியாத நிலைதான் காணப்படும். ஆனால் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் வித்தியாசமான நகர்வுகள் இடம்பெறுவதை காணக்கூடியதாக உள்ளது.

### கட்சியை காப்பாற்றுவதே நோக்கம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் பிரதான கட்சியாக விளங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் மூத்த உறுப்பினர்கள்தான் இம்முறை எதிரணிக்கு மாறிச் செல்கின்றனர். ஐக்கியதேசிய கட்சி ஜே.வி.பி உள்ளிட்ட ஏனைய எதிர்க்கட்சிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா உட்பட பல பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து எதிராணியாக செயற்படும் நிலையில் அந்தப் பக்கமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் மாறிச் செல்கின்றனர். ஆனால் அதனைக் கட்சித் தாவல் என்று கூற முடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை புதுப்பிக்கும் ஏற்பாடு என்றுதான் சொல்ல முடியும்.

ஏனெனில் முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவியுமான சந்திரிக்கா பொது எதிரணியில் முக்கியமான செயற்பாட்டாளராக விளங்குகின்றார். ஆகவே அந்தப் பக்கம் மாறிச் சென்று பொதுச் சின்னம் ஒன்றில் பொது வேட்பாளரை போட்டியிடச் செய்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை தோற்கடிக்கலாம் என்பது பிரதான நோக்கம். பொது வேட்பாளர் வெற்றி பெற்றதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை புதுப்பிக்கலாம் என்பது அவர்களுடைய எதிர்ப்பார்ப்பு. இதனால் அரசாங்கத்தில் இருந்து பொது எதிரணிக்கு மாறிச் செல்லும் உறுப்பினர்களை கட்சிதாவும் உறுப்பினர்கள் என கூறமுடியாது. ஜாதிக ஹெல உறுமயவும் அரசாங்கத்தில் இருந்து விலகி எதிரணியின் பொது வேட்பாளருக்கு ஆதரவு கொடுக்கின்றதே தவிர கட்சி மாறினார்கள் என்று அர்த்தப்படுத்த முடியாது.

### முஸ்லிம் தமிழ் கட்சிகள்

இந்த இடத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் முஸ்லிம் கட்சிகள் தொடர்பான கேள்விகள் எழுகின்றன. இந்தக் கட்சிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு கொடுப்பதாக கூறிக் கொண்டே இருக்கின்றனர். ஆனால் தமிழ் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை இம்முறை பொது வேட்பாளராக யாரை நிறுத்தினாலும் அவருக்கே வாக்களிப்பது என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

ஆதரவு கொடுக்கும் தமிழ் முஸ்லிம் கட்சிகள் உள்ளக அச்சுறுத்தல்கள், அல்லது செஞ்சோற்றுக் கடன் என்ற பல்வேறு விதமான சங்கடங்களுக்குள் கட்டுண்டு கிடப்பதால் அரசாங்கத்தை விட்டு வெளியே வர முடியாத நிலையில் ஆதரவு வழங்க வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டுள்ளது எனலாம். சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்தபோது 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இந்த கட்சிகள் மிகவும் இலகுவாக எதிரணிக்கு மாறிச் சென்றிருந்தன.

ஆனால் மஹிற்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து அவ்வாறு இலகுவாக மாறிச் செல்லக்கூடிய சூழல் இல்லை என்பதை அவர்கள் உணருகின்றனர். ஆனால் அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற சிறிய சிங்களக் கட்சிகள் அரசாங்கத்தில் இருந்து விலகுவது இலகுவானது. ஏனெனில் அவர்களை கடுமையாக அச்சுறுத்தினால் பௌத்த சிங்கள வாக்குகளை இழந்து விடுவோம் என்ற அச்சத்தில் அரசாங்கம் குறைந்த பட்சமேனும் அவர்கள் மீதான ஆத்தித்திரத்தை அமர்த்தி வாசிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. ஆனால் ஆதரவு வழங்கும் தமிழ் முஸ்லிம் கட்சிகளை அச்சுறுத்தி ஆதரவு வழங்குமாறு கோருவது அரசாங்கத்துக்கு இலகுவானது.

### நான்கு கேள்வி

சரி, இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை தோற்கடிப்பது என்ற ஒரு பொதுக் கொள்கையின் கீழ் இடம்பெறும் வழமைக்கு மாறான வித்தியாசமான அரசியல் நகர்வுகள் தொடர்பாக நான்கு கேள்விகள் எழுகின்றன. ஒன்று- பொதுவேட்பாளர் வெற்றி பெற்றால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை புதுப்பிக்கும் திட்டத்தில் ஜாதிக ஹெல உறுமய ஒத்துழைத்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைக்குமா? அல்லது ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் எதிர்க்கட்சியாகவே இருக்குமா?

இரண்டாவது- மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈபிடிபி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற தமிழ்க் கட்சிளை புதிய ஜனாதிபதி தனது அணியில் சேர்த்து மீண்டும் அந்த அரசியலை தொடருவாரா?

மூன்றாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன? சர்வதேச விசாரணைக்கு புதிய ஜனாதிபதி ஒத்துழைப்பாரா? அல்லது சர்வதேச விசாரணை தேவையில்லை, போரை நடத்தியவர்களை மட்டும் விசாரித்தால் போதும் என புதிய ஜனாதிபதி கூறி இனப்பிரச்சினையின் சர்வதேச முக்கியத்துவத்தை குறைக்க முற்படுவாரா?

நான்காவது வடக்கு கிழக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள புதிய இராணுவ முகாம்களை அகற்றவும் சிங்கள குடியேற்றங்களை நிறுத்தவும் உத்தரவிடுவாரா?

ஆகவே அந்த வெற்றியின் பின்னால் உள்ள மேற்படி நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கக் கூடிய முறையில் பொது எதிரணியை உருவாக்கிய பிரமுகர்கள் முன் நின்று செயற்படுவார்களா? அல்லது வெற்றிபெற்றதும் அதே பல்லவிதான் பாடப்படுமா என்பதும் சந்தேகமாக வுள்ளது. அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகியுள்ள சில உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய கட்சியில் இணைவதாகவும் கூறப்படுகின்றது. ஏனெனில் அவர்களுக்கும் சந்திரிக்காவுக்கும் ஏற்கனவே முரண்பாடு கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் ஆட்சி மாற்றம் என்ற ஒரே நோக்கில் முரண்பாட்டிலும் ஓர் உடன்பாடு என்ற அடிப்படையில் தற்போது செயற்படும் பொது எதிரணி தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்பது வெளிப்படையானது.

### தேசிய அரசாங்கம்

ஆகவே பொது எதிரணி வேட்பாளர் வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றதும் உடனடியாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலை நடத்தி தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டிய நிலை ஏற்படலாம். வெற்றியின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீளவும் புதுப்பிக்கப்பட்டாலும் ஆதரவு வழங்கிய பிரதான கட்சிகளின் ஆதரவு பொதுத் தேர்தலிலும் தேவைப்படும் நிலையில் இம்முறை தேசிய அரசாங்கத்தை நோக்கி பயணிக்கக் கூடிய புதிய அரசியல் கலாச்சாரம் ஒன்று உருவாகக் கூடிய சாதகமான நிலைமையும் உள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றி பிரதமர் தலைமையிலான ஆட்சியை எற்படுத்துவதே தமது இலக்கு என பொது எதிரணியின் முக்கியத்தர்கள் கூறுகின்றனர். வெற்றி பெற்று மூன்று மாதங்களில் ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படுவார் என மனோ கணேசனிடம் சந்திரிக்கா உறுதியளித்துள்ளார்.

ஆகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை புதிப்பிக்கும் அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டால் அது சந்திரிக்காவினுடைய அரசியல் வெற்றியாக இருப்பதுடன் சிங்கள அரசியலின் புதிய கலாச்சாரமாகவும் மாறலாம். 2003இல் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு இழைத்த அநீதிக்கான மன்னிப்பாகவும் அமையலாம்.

ஆனால் கடந்த 60 ஆண்டுகால இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தொடர்ந்தும் இருட்டறைக்குள்ளேதான் இருக்கும் நிலை?

நன்றி குளோபல் தமிழ்ச் செய்தி (www.globaltamilnews.net)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சந்தேகம், சந்தோசத்தை பின் தள்ளும்

...நாட்டு நடப்பு...

அன்றைய தமிழ் போராளி அணியை சார்ந்த ஆனந்தனை அந்த அணி வீட்டுக்குச் செல்ல அனுமதித்தமைக்கு காரணம் இறுதிக் கட்டப் போரில் அவன் தனது வலது காலின் பாதத்தை இழந்ததே. இருப்பினும் அப் போராளி அணி அவனுக்கு ஜெய்ப்பூரில் இருந்து போலிப் பாதம் ஒன்றை வரவழைத்து எப்படியோ அவன் நடந்து செல்லக் கூடிய வகையில் ஓர் ஏற்பாட்டை செய்து கொடுத்திருந்தது.

அது மாத்திரமல்ல ஆனந்தன் நீண்டகால உறுப்பினர் என்பதால் கைநிறையப் பணமும் கொடுத்தனுப்ப மறக்கவில்லை. கைநிறையப்பணம் இருந்தும் என்ன பயன்? அவனைப் பெற்றவர்கள், மற்றும் உறவினர்கள் அனைவரும் தமிழ்நாட்டில் நிரந்தரமான பிரஜைகள் ஆகிவிட்டனர். அதனால் அவர்களுடன் அவனுக்கு எந்தவித தொடர்புகளும் இல்லை. இன்று அவன் ஒரு தனி மரமானான்.

அவனது பிறப்பிடம் மூதூர், கட்டைப்பறிச்சான். பெற்றோர்கள் அங்கு இல்லாவிட்டாலும் ஒரு பழைய வீடு அவனுக்காக காத்திருந்தது. அதை திருத்தி அங்கு வாழ ஆரம்பித்தான் ஆனந்தன். அது அவனது பூர்வீக வீடு. எத்தனை நாளைக்கு அவ்விதம் அந்த வீட்டில் தனியாக வாழ்வது? தனக்கேற்ற வகையில் ஒரு துணையை தேட ஆரம்பித்தான்.



ஆனந்தனின் முழு முயற்சியின் பலனாக அவனுக்கு துணையாக வந்தவள் தான் துர்க்கா. ஆனந்தனை விட அவள் சுமார் பத்து வயதிற்கு இளையவள். அவளின் பெற்றோரும் மூத்த சகோதரனும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் வாழ்ந்தால் ஆனந்தனோடு தான் வாழ்வேன் என அடம்பிடித்து ஆனந்தனை அவளுக்கு உரியவனாக ஆக்கிக் கொண்டாள் துர்க்கா.

மேலும் அவள் ஆனந்தனை கைபிடித்தபடியால் பெற்றோர் அவளுடன் எந்த தொடர்பையும் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. துர்க்காவை நல்ல இடத்தில் கரை சேர்க்கும் வரை அவளது மூத்த சகோதரன் கூட நீண்டகாலம் பிரம்மச்சாரியாக வாழ்ந்து வந்தான். ஆனந்தனை அவள் விரும்பியதால் மனமுடைந்து போனான் சகோதரன்.

ஆனந்தனும் துர்க்காவும் ஆரம்பத்தில் மிகவும் அன்னியோன்யமாக வாழ்ந்து கட்டைப்பறிச்சான் பகுதியில் சிறந்த இளம் தம்பதிகள் என ஊராரினால் மெச்சப்பட்டனர். இரண்டு பேரும் பெற்றோர்களின் உதவி இல்லாமலே அங்கு வாழ்ந்து காட்டினார்கள்.

சுமார் ஒரு வருடத்திற்குப் பின் ஓர் அழகான பெண் குழந்தை அவர்களுக்கு பிறந்தது. அதன் அதிர்ஷ்டம், வங்கி மூலம் ரூபா ஒரு இலட்சம் மிக குறைந்த வட்டியில் வழங்கப்பட்ட சமயம் ஆனந்தனும் அத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டான். அத் தொகையை மூலதனமாகக் கொண்டு அப்பகுதியில் சிறிய தேனீர் கடையொன்றை ஆரம்பித்தான் ஆனந்தன்.

அங்கு வியாபாரம் நல்ல முறையில் எவ்வித தடங்களும் இன்றி சென்று கொண்டிருந்ததால் அவனது குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவு இருக்கவில்லை. துர்க்காவின் அளவற்ற பங்களிப்பு ஆனந்தனுக்கு ஆறுதலளித்தது. ஆனந்தன் ஓர் அங்கவீனர் என்பதால் துர்க்கா அவன் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வந்தாள்.

இருப்பினும் ஆனந்தனிடம் ஒரு பெரும் குறைபாடு இருந்து வந்தது. நல்ல குடும்பமொன்றில் இருக்கக்கூடாத ஒரு குறைபாட்டினால் அந்த இளம் தம்பதிகளிடையில் ஒரு பாரிய விரிசலை ஏற்படுத்த தவறவில்லை.

'சந்தேகமென்பது இல்லத்தின் முன் வாசல் வழியாக வந்தால், சந்தோசமென்பது பின் வழியால் சென்றுவிடும் என்பார்கள். ஆனந்தனின் அடிமனதில் அடிக்கடி எழும் சந்தேகம் எனும் கொடிய நோய்க்கு இரண்டு முக்கிய அடிப்படை காரணிகள் இருந்து வந்தன.

ஒன்று துர்க்காவின் அழகு. அடுத்தது ஆனந்தனை விட அவள் பத்து வயதிற்கு குறைவாக இருப்பது மேலும் அவர்களிடையே இருந்த பாரிய வயது வித்தியாசம் மற்றும் துர்க்காவின் அழகு தொடர்பில் தவறாக சிந்திக்கும் அவ்வூர் இளம் வாலிபர்களின் மனதில் தவறான எண்ணங்களை அது தூண்டி விட்டுக் கொண்டே இருந்ததுடன் துர்க்காவிடம் ஒரு வகை கவர்ச்சியும் காணப்பட்டது.

அதனால் ஆனந்தன் குழம்பிப் போய் இருந்தான். எப்பொழுதும் பதட்டப்பட்டவன் போல் காணப்பட்டான். துர்க்காவை அவன் எங்கும் தனியாக அனுப்பி வைக்க விரும்புவதில்லை. அவன் நடத்திக் கொண்டிருக்கும் தேனீர் கடை கூட மேலும் மேலும் அவனை பதட்டப்படுத்த ஒரு காரணியாக இருந்து வந்தது.

ஆனந்தனின் கடைக்கு வரும் இளசுகள் தேனீரை குடித்துவிட்டு உடனே அவ்விடத்தை விட்டு அகழ மாட்டார்கள். மணிக்கணக்கில் அங்கு பேசிக்கொண்டே இருப்பார்கள். துர்க்கா அங்கு அவர்களின் கண்களில் தெரியும் வரை அந்த கடையை விட்டு அசையவே மாட்டார்கள். சகலவற்றுக்கும் காரணம் மிக குறைந்த வயதைக் கொண்ட அதிகூடிய அழகையும் கவர்ச்சியையும் தன் வசம் வைத்திருக்கும் துர்க்காவே.

சில வேளைகளில் ஆனந்தன் தனக்குள் இருக்கும் குறைபாட்டை எண்ணி தனக்குள்ளே கவலைப்படுவான். அங்கவீனமும், வயது கூடிய தோற்றமும் அவனை அமைதியாக இருக்க விடவில்லை. துர்க்கா அதன் காரணமாக எங்கே தன்னை விட்டு போய்விடுவாளோ என்ற சந்தேகமும், பயமும் அவனை அடிக்கடி அச்சுறுத்திக் கொண்டே இருந்தன. அதனால் அவளை எந்தவொரு ஆணுடனும் பழக அனுமதிக்க மாட்டான்.

தனக்குள்ள குறைபாட்டின் காரணமாக இருக்கும் பலவீனத்தை ஏனையோர் தங்களுக்கு பலமாக எண்ணி பிரச்சினை தருவார்களோ என அவன் அடிக்கடி பயந்திருந்தான். இவை அனைத்தையும் மறக்க ஒரே வழி 'மது' என திடமாக நம்பினான். அந்த கெட்ட பழக்கத்திற்கு அடிமையானதால் அமைதிக்கு அங்கு இடமிருக்கவில்லை.

குடிப்பது அவனது நாளாந்த கடமைகளில் முக்கிய இடத்தை வகித்ததால் அடிக்கடி துர்க்காவை அவன் துன்புறுத்த ஆரம்பித்தான். சந்தேகமென்பது அங்கு தேவையான அளவு வேர் விட்டு விருட்சமாக மாறியதே சகலவற்றுக்கும் காரணம். அவனிடமுள்ள சகல குறைபாடு களையும் அடியோடு மறந்து குடும்பம் நடத்த வந்தவளே துர்க்கா. ஆனந்தனின் அண்மைக்கால போக்கு அவன் மேல் இருந்த அளவற்ற அன்பையும் பாசத்தையும் அடியோடு அறுத்தெறியும் நிலைக்கு அவளை தள்ளத்தூண்டியது.

அவனது இம்சையை ஒரு நாள், இரு நாள் பொறுக்கலாம். தொடர்ந்தும் பொறுக்க முடியுமா? ஆனந்தனை நம்பித்தானே சகல உறவுகளையும் விட்டுப்போட்டு வந்தவள்! அவனது நடவடிக்கை இப்படி என்றாள் அவள் எப்படி குடும்பம் நடத்துவது?

அவனது இம்சையை தாங்க முடியாத துர்க்கா ஒரு நாள் தனது குழந்தையை தூக்கிக் கொண்டு பெற்றோரின் வீட்டுக்குச் சென்றாள். முன்கூட்டியே ஆனந்தனின் அளவற்ற அட்டகாசத்தை பற்றி தெரிந்திருந்ததால் அவளின் பெற்றோர் அவளை ஏற்றுக் கொண்டனர். துர்க்காவின் மூத்த சகோதரன் வேலைக்குச் சென்று மாலை வீடு வந்த பொழுது முற்றத்து மாமரத்தில் சீலைத் தொட்டிலொன்று தனியாக ஆடிக் கொண்டிருந்ததை அவதானித்து விட்டு அருகில் சென்று அவன் பார்த்த சமயம் ஓர் அழகான பெண் குழந்தையொன்று அங்கு அமைதியாக தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

தனது சகோர்தரி துர்க்கா வீட்டுக்கு வந்துவிட்டதை அவனால் தெளிவாக யூகித்துக் கொள்ள முடிந்தது. அதுமாத்திரமல்ல அவள் தனது குழந்தையை மாத்திரமல்ல குடும்பப் பிரச்சினையையும் சுமந்து கொண்டு வந்துள்ளாள் என்பதையும் தெளிவாக புரிந்து கொண்டான். அவளின் அழகான முகத்தில் ஆழமாக பதிந்திருந்த ஆனந்தனின் கைவிரலடையாளங்களும் அவனது தீட்சணியம் பார்வையில் இருந்து அகழவில்லை. அதனால் அவன் கடும் கோபமுற்றான்.

'நீ இனிமேல் இங்கே இரு. பார்ப்பம் என்ன நடக்குது என்று' அங்கு அமைதியற்றிருந்த துர்க்கா அவனின் அதிகார குரலினால் சற்று ஆனந்தமானாள். அது மாத்திரமல்ல முன்னைய தவறுகளுக்காக பெற்றோரிடமும், சகோதரனிடமும் அவள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

ஒரு பிள்ளை தவறு செய்திருந்தாலும், அதற்கு ஓர் ஆபத்து ஏற்படும் போது எந்தப் பெற்றோர், சகோதரர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள்? அதைத்தான் அன்றைய முன்னோர்கள் 'இரத்த பாசம்' என அத்தனை உள்ளங் களிலும் பதிய வைத்திருந்தார்கள்.

தனது இம்சைக்கு முகம் கொடுக்க முடியாது தன்னை விட்டுச் சென்ற மனைவியையும், குழந்தையையும் எங்கும் தேடிச் செல்ல வேண்டிய அவசியம் ஆனந்தனுக்கு இருக்கவில்லை. அவனுக்கு தெரியும் துர்க்கா எப்படியும் அவளது பெற்றோரின் வீட்டுக்குத் தான் சென்றிருப்பாள் என்று.

அவன் அங்கு சென்றிருந்த வேளையில் துர்க்காவின் மூத்த சகோதரன் இருக்கவில்லை. இருந்திருந்தால் நிலைமை மோசமடைந்திருக்கும். துர்க்கா அவனது நிலைமையை நன்கறிந்த வகையில் எந்தவிதத்திலும் அவனுடன் கோபித்து பேசாமல் மிக அமைதியாக பேசினாள். அவன் தனது தவறை உணர்ந்து அவளிடமும் தனது மாமா, மாமியிடமும் மன்னிப்பும் கேட்டாலும் அவர்கள் அவனை நம்பத் தயாராக இருக்கவில்லை. அவர்கள் மீண்டும் துர்க்காவையும், குழந்தையையும் ஆனந்தனுடன் அனுப்ப விரும்பாது அவனை பேசித் துரத்தினர். அவனது நியாயத்தை கேட்டு அவனுக்கு நியாயமான தீர்ப்பை வழங்க அயலவர்கள் கூட முன்வராததால் மனமுடைந்து அங்கிருந்து மிக சோர்வுடன் புறப்பட்டான் ஆனந்தன்.

அவன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற ஒரு மணித்தியாலத்தின் பின் ஒரு பதட்டமான செய்தியை அந்த ஊரில் கேட்க கூடியதாக இருந்தது. 'அந்த ஊரிலுள்ள பாலத்திற்கு அருகில் நஞ்சுத் தாவர விதைகளை சாப்பிட்ட ஒருவர் உணர்வற்ற நிலையில் இருப்பதே' அச்செய்தி ஆகும். உயிருக்கு போராடிக் கொண்டிருந்த ஆனந்தனை அந்த வழியால் வந்த ஆமிக்காரர்கள் தங்கள் முகாமுக்கு எடுத்துச் சென்று அவசர சிகிச்சையளித்ததின் காரணமாக அவனின் உயிர் காப்பாற்றப்பட்டது. அவனிடம் பெறப்பட்ட குடும்பத் தகவல்கள் அத்தனையும் இராணுவத்தினரின் மனதை உருக்கியது. அவன் முன்னாள் போராளி என்பதை கருத்தில் கொண்டு அவனுக்கு உதவ முன்வந்தது மாத்திமல்லாது துர்க்காவின் குடும்பத்துடன் அவனை சேர்த்தும் வைத்தனர்.

தற்பொழுது அந்தப் பகுதி இராணுவ முகாமில் ஆனந்தன் ஒரு சிவில் தொழிலாளி. துர்க்கா அவளது பெற்றோருடன் இருப்பதால் அவனது பழைய பழக்க வழக்கங்கள் அனைத்தும் அவனை விட்டு எங்கேயோ ஓடி ஒழிந்து கொண்டன. மேலும் சந்தேகம் எனும் கொடிய நோய் அவனை அணுக பயந்தது.

**- பாலையூற்றான் -**




## ஊர்ப்பற்று

சீனாவில் உள்ள ஒரு கோடீஸ்வரர் தான் பிறந்து வளர்ந்த கிராமத்தின் மக்கள் எளிய மரத்தால் ஆன குடிசைகளில் வாழ்வதையும் அவர்கள் வருமானத்திற்கு மிகவும் கஷ்டப்பட்டு கொண்டிருந்ததையும் பார்த்து அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த முடிவு செய்தார். உடனடியாக அந்த பகுதியில் அனைத்து வசதிகளையும் உடைய அபார்ட்மெண்ட் கட்டிடங்களை தனது சொந்த செலவில் இலவசமாக அனைவருக்கும் கட்டி கொடுத்தார். அதுமட்டுமின்றி அந்த பகுதிக்கு சாலை வசதி, மின்சார வசதி என அனைத்தையும் தனது செலவிலேயே செய்தார். மேலும் வறுமையின் பிடியில் இருந்த ஒருசில குடும்பங்களுக்கு தினமும் மூன்று வேளை உணவு இலவசமாக வழங்கவும் வழிவகை செய்துள்ளார்.




## கைதியின் அதிர்ஷ்டம்

அமெரிக்காவில் உள்ள Baltimore என்ற நகரில் உள்ள சிறையில் போதை மருந்து கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கும் கைதி Tavo White என்பவர் சிறைக்கு வந்த பின்னரும் சிறையில் செல்போன், போதை மருந்து மற்றும் அனைத்து வசதிகளையும் தனது செல்வாக்கால் ஏற்படுத்திக்கொண்டது மட்டுமல்லாமல் அங்கு பணிபுரியும் நான்கு பெண் அதிகாரிகளை கர்ப்பமாக்கியுள்ள அதிர்ச்சியான தகவல் தற்போது வெளிவந்துள்ளது.

## பாட்டு கேட்டது தப்பா!

பாகிஸ்தானைச் சேர்ந்தவர் 17 வயதான ரெஹானா பீபி. குறித்த சிறுமி வீட்டில் தனியாக இருந்தபோது அதிக சத்தமாக இசை கேட்டுக் கொண்டிருந்தார். இதனையடுத்து அவரின் உறவினரான ஒருவர் சத்தத்தை குறைக்கும்படி கேட்டுள்ளார். அதற்கு ரெஹானா மறுத்து விட்டார். இதனால் அவர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்படவே ஆத்திரம் அடைந்த உறவினர் சிறுமியை சரமாரியாக சுட்டுக்தள்ளினார். இதனையடுத்து குறித்த சிறுமி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

## ஆண்மையை அதிகரிக்க ஒயின்



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் (Kim jong un Age-31) குண்டாக இருப்பதால் அவர் தனது மனைவியை படுக்கையில் திருப்தி படுத்த முடியவில்லை என்றும் அவரால் மீண்டும் தந்தையாக முடியவில்லை எனவும் அந் நாட்டு மக்கள் கிண்டலடிக்கிறார்கள். எனவே அவர் தனது ஆண்மையையும், ஆயுளையும் அதிகரிக்க நல்லபாம்பில் (Cobra) இருந்து தயாரிக்கப்படும் ஒயின் மதுபானத்தை தினமும் அளவுக்கு அதிகமாக அருந்தி வருகிறார்.

## இப்படியும் பெற்றோர்

பிரான்சின் மியக்ஸ் நகரை சேர்ந்த தம்பதியினர் ஒருவர் தங்களது இரண்டு மகள்களுக்கு கடந்த ஜனவரி முதல் மே வரை தங்கள் மகள்களை அடித்தும், மண்டியிட வைத்தும், மேலும் தங்களது இளைய மகனின் கழிவுகளை இந்த இரண்டு சிறுமிகளும் சாப்பிட வேண்டும் என கட்டாயப்படுத்தி மிகவும் கேவலமான முறையிலும் நடந்து கொண்டுள்ளனர். இது தொடர்பாக கைது செய்யப்பட்ட தம்பதியினருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து மியக்ஸ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் கொடுமைப்படுத்தப்பட்ட இரு மகள்கள் உட்பட, இவர்களது 6 குழந்தைகளும் சமூக நலன் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

## இரட்டையருக்கு குழந்தை

பொதுவாக இரட்டை குழந்தைகள் ஒரே நாளில் பிறப்பது, ஒரே பள்ளியில் படிப்பது, ஒரே நாளில் திருமணம் செய்வது ஏன் ஒரே நாளில் மரணம் அடைந்ததாக கூட இதுவரை நாம் செய்திகள் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த ஒரு இரட்டையர்களுக்கு ஒரே நாளில் குழந்தை பிறந்துள்ளது. அதுவும் இருவருக்குமே ஆண் குழந்தை பிறந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டு. பத்துமணிக்கு மேலே இருக்கும். எல்லோரும் படுத்தாயிற்று. கூடத்து ஊஞ்சல் விட்டுவிட்டு முனகுகிறது. சங்கிலியில் இடுப்பைச் சாய்த்தபடி பலகை ஆட்டத்தோடு அவர் மனமும் அப்படியும் இப்படியுமாக ஆடிக் கொண்டிருக்கிறது. பால் தம்ளரை நீட்டியபடி கணவரின் முகத்தைக் கவலையுடன் ஆராய்கிறாள் காமு. அவளால் படித்துவிட முடியுமே?

"ரகு சாயங்காலம்கூட ஞாபகப் படுத்தினான். அப்பா மறந்திருக்க போறார் ன்னான். ரெண்டு நாள்ளே டெபாசிட் கட்ட லேன்னா..." சர்மா எச்சில் விழுங்கிக் கொள்கிறார். அவராவது மறப்பதாவது. காமு எவ்வளவு நாசூக்காக இதைச் சொல்கிறாள். தனக்கே நினைவுபடுத்திக் கொள்வதுபோல. ஒரு பயத்துடன் திகிலுடன் இருவராலும் முடியாத ஒன்றை எப்படிச் சமாளிப்பது என்ற கவலையுடன் ஓ காமாட்சி நீ மாயமான் இல்லை. சிவதனுசு. வாழ்க்கை என்ன பெரிய போர்க்களம். எனக்கு நீ இருக்கியே ராமபாணம் போல!

"அப்புறம்..." காமாட்சி மறுபடி தயங்குகிறாள். "ரெண்டு நாளா அப்புறம் சொல்லலாம்னே இருந்துட்டேன்" ஏதோ எதிர்பாராத இன்னொரு தாக்குதல். இப்போது தன்னை அதற்குத் தயார்படுத்திக் கொண்டவராக நிமிர்கிறார். மளிகைக்காரன் வந்து சத்தம் போட்டிருப்பான். மூணுமாசமா பாக்கி நிக்கிறதே.

"வீட்டு ஓனர் வந்திருந்தார்" கொஞ்சம் வேகமாக.. "போனமாச பாக்கி வேற இருக்கே. இதுவரை பொறுமையா இருந்ததே பெருசு தான்" நேரங்கெட்ட ஒரு ரசனை சர்மாவுக்கு. வீட்டுக்காரர் என்று எல்லோரும் சொல்வதை எவ்வளவு சுபாவமாகத் தவிர்த்திருக்கிறாள்! என் காமாட்சி.

"என்னா?" தயங்குகிறாள். குரல் மெலிகிறது. லேசான நடுக்கம் தெரிகிறது.

# மிச்சம் நாளைக்கு

"என் தந்தை வளையலை. ஒரு ரெண்டு மாசம்..." சர்மாவுக்கு மனசு இன்னும் வலிக்கிறது. அவள் அப்பா போட்டதில் ஒரே மிச்சம். தான் எதுவுமே செய்ய முடிந்ததில்லை என்ற குறையோடு "விடுங்கோ... ஏன்னா ஆபிசுல பிராவிடண்ட் ஃபண்டு லோன் போடலாம்னு"

இப்போது அதில் எடுக்க முடியாது என்று அவளுக்கு எப்படிப் புரிய வைப்பது இருக்கிற ஒரு சின்ன நம்பிக்கையைக் குலைப்பானேன்! "பாப்போம், பாப்போம்.. நீ போய்ப் படுத்துக்கோ எனக்குக் கொஞ்சம் ஃபைல் பாக்கணும்"

அந்தக் கோப்பு மூன்று நாளைய மாயமான் கோப்பு. காலை நேர ஆபிஸ் களைகட்டியிருந்தது. வெய்யிலில் நடந்து வந்த வியர்வை வழிய டிபன் பாக்சை மேஜை மூலையில் தள்ளி நிமிர்கையில் வேகமாக வந்த பியூன் "ஓங்களை மானேஜர் கூப்பிடறார்.."

அந்தக் கோப்பையும் தானே எடுத்துக் கொண்டு சர்மா உள்ளே நுழைய, மானேஜர் எதிர் சீட்டில் அந்த மூணுநாள் ஆசாமி. "மிஸ்டர் சர்மா இவரைத் தெரியுமா?" "தெரியும் சார்... மூணு நாளா என்னை வந்து பாத்துக் கிட்டிருக்காரு, இந்த பைல் சம்பந்தமா"

"இவரு ஃபைலை நீங்க வேணும்னே டிலே பண்றீங்களாம்! இன்னும் அவர்கிட்டே நீங்க, "சார், நீங்க கொஞ்சம் வெளியிலே வெயிட் பண்ணுங்க அப்புறமா கூப்பிடறேன்" அவர் எழுந்து சர்மாவை ஒருமுறை முறைத்துவிட்டு வெளியேறியதும்-

"உக்காருங்க மிஸ்டர் சர்மா. இவர் ஃபைல் என்ன ஸ்டேஜ்?"

"இதோ கொண்டாந்திருக்கேன் சார்... என் குறிப்பை விரிவா எழுதியிருக்கேன். இவருக்கு சாதகமா அதுல நான் எழுதணும்னு மூணுநாளா பிரஷர் கொடுத்துக்கிட்டிருக்காரு. செஞ்சா ஒரு பெரிய தொகை தருவதாக சொன்னாரு. பொதுநலனுக்கு ரொம்ப பாதகமான காண்ட்ராக்ட் அது. இவுரு ஆளும் கட்சிக்காரராம். பயமுறுத்துற மாதிரியும் பேசினாரு. அவர் கேக்கிற மாதிரி தர்மத்துக்கு விரோதமா என்னால செய்ய முடியல்லே. நான் சரியான முடிவுதான் எடுக்கிறேன்னு எனக்கு நானே தீர்மானிச்சுக்க ரெண்டு நாள் ஆயிடுச்சி"

மேலோட்டமாக சர்மாவின் குறிப்புகளைப் படிக்கையிலேயே மானேஜரின் புருவம் உயர்கிறது..

"சர்மாஜி... நியாயங்கிறது வேற, நடக்கிறது வேற. இப்ப என்னாச்சு. மேலிடத்துல எல்லோருமே இவருக்கு ரொம்ப நெருக்கம். உங்களைப் பத்தி ரொம்ப புகார் பண்ணியிருக்கார். நெறைய பணம் கேக்கிறீங்களாம். கொடுத்தாத்தான் வேலை முடிப்பேன்னு சொன்னீங்களாம் இம்மாதிரி வாங்கி வாங்கி பெரிசா சொந்த வீடுகூட வாங்கிட்டீங்களாம்."

சர்மாவுக்குத் தன் ரேடியோ ஞாபகம் வந்தது. தன் ஒரே நகையான வளையலை காமு அடகு வைக்கச் சொன்னது நினைவு வந்தது. கூடவே சிரிப்பும் வந்தது.

தொடரும் ...

வாழ்வியல் -29

## மொட்டைக் கடிதமும் மோசமான விளைவுகளும்



ஒருவரின் செல்வாக்குக்கு அல்லது உயரச்சிக்கு நேரில் குழிபறிப்பதால் தனக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக, அவரைப் பற்றிய முறைப்பாடுகளை தன்னை இனங்காட்டாத வகையில் கடிதம் மூலம் உயர் அதிகாரிகளுக்கு அறிவிப்பதை மொட்டைக் கடிதம் என்பர்.

'பெற்றிசன் காரன்' (Petitioner) கடித்து விஷப்பாம்பு செத்ததாக ஒரு கதை உண்டு. அவ்வளவு விஷம் மொட்டைக்கடிதத்தில் உண்டு. மொட்டைக் கடிதம் எழுதுபவரது எதிர்ப்புணர்வு சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டதென்பதை மறைப்பதற்காகத்தானே அவர் தன்னை வெளிக்காட்டாமல் இருக்கிறார்!

மனிதர்களுக்கு பகைமை உணர்வு ஏற்படுவதற்கு காரணம் ஒன்று இருக்க வேண்டுமென்றில்லை! நான் சொன்னதை செய்யவில்லையே, இப்போதெல்லாம் என்னை மதிப்பதில்லையே என்றெல்லாம் எண்ணி எண்ணிக்கூட பகைமை உணர்ச்சி ஏற்படும். அதே போன்று பொறாமை என்பது காட்டுத்தீ போன்றது. ஏற்பட்டு விட்டால் காட்டையே அழித்துவிடும். அவன் என்னைக்காட்டிலும் உயர்ந்து விட்டானே, மகன் 'மெடிசின்' (Medicine)க்கு தெரிவாகி விட்டானே, அந்தஸ்தில் உயர்ந்த மனைவி கிடைத்து விட்டாளே என்றெல்லாம் கூட பொறாமை ஏற்படும். அடுத்து போட்டி! ஏதாவது ஒரு விடயத்தை எடுத்துக்கொண்டு நீயா அல்லது நானா என்று சவால் விடுவது. இந்த காரணிகளுள் ஏதோ ஒன்று அல்லது சில சேர்ந்து ஒருவரை பழிவாங்கும் உணர்ச்சிக்கு இட்டுச்செல்லும்.

'போட்டிபோடு, பொறாமை கொள்ளாதே' என்று கூறுவார்கள். ஆனால் எம்மவர் அதனை செவிமடுப்பதில்லை. அதற்கு காரணம் அவரவரது இயலாமை, தகுதியின்னை மற்றும் சோம்பேறித்தனம் என்றுதான் கூறவேண்டும். அப்படியானவர்கள் தான் குறுக்கு வழியில் சென்று தமது எதிரித்தரப்பினர் என்று கருதுபவர்களை காலை வாங்கும் விதமாக மொட்டைக்கடிதம் எழுதுகிறார்கள்.

அந்தக் கடிதத்தில் அவர்கள் தம்மைப் பற்றிய எந்த விபரமும் தெரியாதபடி பார்த்துக்கொள்வது மட்டுமன்றி தமது கையெழுத்தையும் வெளிப்படுத்த மாட்டார். யாராவது தமக்கு வசதியானவர்களை பிடித்து தாம் சொல்ல முற்படுவனவற்றை எழுதுவிப்பர். அல்லது தட்டச்சு செய்யவும் முயல்வர்.

அடுத்து அப்படியான துரோகச் செயலை செய்ய முயல்பவர் நிச்சயமாக மனச்சாட்சி அற்றவராகவே இருப்பதால் எதிரி பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறி நற்பெயரை நாறடிக்க செய்வார். நிச்சயமாக பெண்களை, குறிப்பிட்ட நபருடன் சம்பந்த படுத்தாமல் அக் கடிதம் பூர்த்தியாகாது.

அடுத்து மொட்டைக்கடிதத்தின் பிரதான அம்சம் என்னவென்றால் பலருக்கும் பிரதி அனுப்புதல். அதாவது குறிப்பிட்ட நபருக்கு எங்கெங்கு செல்வாக்கு இருக்கிறதோ அல்லது எங்கெல்லாம் உறவுக்காரர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் பிரதி அனுப்புதல். இப்போதான் நிழற்பட பிரதிகள் எடுக்கும் வசதி இருக்கவே இருக்கின்றதே! எனவே அதிக பிரதிகளை அனுப்ப இயலும்.

இப்போ இந்த மொட்டைக்கடிதத்தை அனுப்பியாயிற்று என்று வைப்போமே..... அடுத்த கட்ட நடவடிக்கையாக தனக்கு சாதகமான சிலரை ஒழுங்கு செய்து கொண்டு குறிப்பிட்ட நபர் பற்றி வதந்திகளை கிளப்புவது. வதந்திகளை பற்ற வைத்து விட்டால் போதும், பின்பு அதில் சம்பந்தப்படாதவர்களும் அதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கின்றதென்று இரகசியமாக அறிந்து கொள்ள முயற்சிப்பர். பிறகென்ன இன்னாரைப்பற்றி எல்லோருமே அவதூறாகக் கதைக்கிறார்களே, அவை உண்மைதானா என்று கதை கட்டியவரே விசாரிப்பதில் அது சென்று முடிந்துவிடும்! 'நெருப்பில்லாமல் புகையாது' என்ற பொன்மொழியை முன்வைத்தால் விஷயம் ஒப்பேறிவிடுகிறது.

எமது கதாநாயகனைப் பொறுத்தவரை இப்போ பாம்புக்கு பல் புடுங்கியாயிற்று. மற்ற மற்றவர்களின் விமர்சனங்களால் எதிர்தரப்புக்காரர் மனம் புளுங்கி நடு நடுங்கிப் போயிருப்பார். அந்த நேரம் பார்த்து முறைப்பாடு செய்யப்பட்டவரையும் பிரதி அனுப்பப் பட்டவர்களையும் சந்தித்து நாடி பிடித்துப்பார்ப்பதுடன் எதிர்தரப்பினர் இப்படியானவர் என தாம் நம்பவில்லை என்றும், மொட்டைக்கடிதத்தில் இல்லாத, தனக்கு தெரியும் என்கின்ற இன்னும் சில குற்றங்களை சுமத்துவது. அதன் மேல் 'சேர்! இவரை சும்மா விடக்கூடாது. இவருக்கு இன்னென்னவிதமாக தண்டனைகள் வழங்கினால்தான் நாளைக்கு மற்றவர்கள் மட்டுமன்றி சமுதாயமும் திருந்தும்.' என்ற விதமாக ஆலோசனை கூறுவது.

இது மொட்டைக்கடிதத்தின் ஒரு பக்கமாகும். இனி கடிதம் சென்றடைந்த இடங்களில்.....

அனேகமாக மேலதிகாரிகள் மற்றவர்களின் கதைகளை நம்புபவர்களாகத்தான் இருப்பார்கள். அதற்குமேலாக அலுவலகங்களில் விடயங்களை வேவு பார்ப்பதற்கும் சிலரை நியமித்து வைத்திருப்பார்கள். யாராவது எதையாவது சொன்னால் 'அப்படியா? அப்படியா? என்று கதையை வளர்த்து மேலதிகமாக எவர் வாயிலாகவாவது வதந்திகளை கேட்டறிய முயற்சிப்பார்களேயன்றி நடுவு நிலைமை கொண்டு ஆராயமாட்டார்.

இப்படியானவர்கள் ஒரு மொட்டைக்கடிதம் மற்றும் வதந்திகள் பற்றிய உண்மையை நடுவு நிலைமை கொண்டு ஆராயாமல் எடுக்கும் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களை பாதிக்கும் என்பதை உணர்வதில்லை. தவிர, கடித பிரதியை பெற்றுக் கொண்டவர்களில் சிலர் 'வாய்த்தது தாயம்' என்பது போல நடந்து கொள்வர். அந்தக் கடிதத்தை பாதுகாத்து வைத்துக்கொண்டு, சந்தர்ப்பம் வரட்டும் என்று காவல் இருப்பவர்களும் ஏராளமானோர் இருக்கின்றனர். உண்மையில் தன்னை உருமறைத்து மற்றொருவரை பழிவாங்க முயல்பவரை சமூகம் அடையாளம் கண்டு தண்டிக்கும் நிலை ஏற்பட வேண்டும்.

எனது நெருங்கிய சகா ஒருவர் நீண்டகாலமாக விளையாட்டுக் கழகம் ஒன்றை வெற்றிகரமாக நடாத்தி வந்தார். அதன் மேல் அசூயை கொண்ட இரு அங்கத்தவர்கள் மொட்டைக்கடிதம் ஒன்றை அவதூறாக எழுதி பலருக்கும் அனுப்பிவைத்தனர். அதனால் அந்த கழகம் உடைந்தது. ஆனால் அவர் வேறு வழியில் தனது திறமையை வெளிப்படுத்தி கழகத்தைக் காப்பாற்றிக் கொண்டார். ஆனால் மொட்டைக் கடிதம் அனுப்பியவர் விபத்தொன்றிலும், மற்றவர் தீராத நோய் ஒன்றால் தாக்குண்டும் இறந்தனர். பாருங்கள், வினை விதைத்தவர்களால் தினையை அறுக்க முடியாதல்லவா?

# அப்பா

- கனிஷ் -

நன்றாக உறங்கிக்கொண்டிருந்தேன் என் அலைபேசி ஓயாமல் கத்திக்கொண்டேயிருந்தது,,,

டேய் இந்த நேரத்துல யாரு, எடுத்து கேட்டுத்தொலைடா தூங்கமுடியலை அப்பா கூடத்தில் படுத்தபடி சத்தம் போட்டார்...

எழுந்து சென்று பார்த்தேன் என் மாமாதான் கூப்பிட்டிருந்தார்.. எடுத்து காதில் வைத்தேன்

என்ன மாமா சொல்லு தூக்கம் கலையாமல் கேட்டேன், டேய் மாப்புள என்று விட்டு அழுதுகொண்டிருந்தார்

என்ன மாமா விசயத்த சொல்லு கடுப்படிக்காம

நீ இப்பவே மாமாவ கூட்டிட்டு உடனே கிளம்பி வாடா

என்ன மாமா? அக்காவுக்கு ஏதும் உடம்பு சரியில்லையா? மறுமுனையில் அழைப்பு துண்டிக்கப் பட்டிருந்தது...

திரும்பவும் தொடர்பு கொண்டேன் நீங்கள் தொடர்பு கொள்ளும் எண் தற்சமயம் பிசியாக இருக்கிறார் என்றே சொல்லிக்கொண்டிருந்தது...

அப்பா எழுந்திரிப்பா மாமா உடனே கிளம்பி வரச்சொல்றார்...

போடா அந்தாளுக்கு வேற வேலையில்ல எதுனா பொண்டாட்டியும் புருசனும் சண்ட போட்டிருப்பாங்க நாம போனா அத செய்யில இத செய்யிலனு சீர்வரிசை கேட்பாரு போ போய்படு காலையில பாத்துக்கலாம்.. சொல்லிவிட்டு திரும்பி படுத்துக்கொண்டார்....

எனக்கும் அப்பா சொல்வதே சரியென பட்டது. மாமா என் அக்காவை திருமணம் செய்த நாளிலிருந்து பல இரவுகள் இது போல பிரச்சனை வந்திருக்கிறது...

எப்போது பார்த்தாலும் சண்டை போடுவதும் நாங்கள் போய் சமாதானம் செய்வதுமாகவே இந்த இருபது வருடங்கள் நகர்ந்து விட்டது...

எல்லோர் வீட்டிலும் பகலில் சண்டை போட்டு இரவில் சேர்ந்துகொண்டால் என் அக்காவீட்டில் மட்டும் இரவில்தான் சண்டையே வருகிறது...

அவள் அழுது ஒப்பாரி வைத்து ஊரைக்கூட்டினால் இவர் போனை போட்டு எல்லாரையும் வரவழைத்து பஞ்சாயத்து பேசுகிற ரகம்....

உப்புமாவில் உப்பு பத்தலை என்று ஆரம்பித்து உங்க வீட்டுல என்னத்த சீர் செஞ்சாங்க என்பதில் வந்து நிற்கும். இவர்கள் சண்டையை நினைக்கையில் எனக்கு சில நேரம் எரிச்சலாகவே இருக்கும்...

அம்மா போனபின்பு அப்பா டீக்கடை நடத்தி வந்த வருமானத்தில் எங்கள் இருவரையும் படிக்க வைத்து அக்காவை மாமாவுக்கு கட்டி வைத்தார்,,, இன்றுவரை அக்காவுக்கும் அக்கா பெண் நித்தியாவுக்கும் அப்பாதான் மருத்துவசெலவு, துணி எடுத்து தருவது என எல்லாமும் பார்த்துக் கொண்டிருக்கிறார்,,,,

மாமா நல்ல வேலையில் இருந்தும் கைநிறைய சம்பாரித்தும் அப்பாவிடமிருந்து பணம் கரப்பதிலேயே குறியாக இருப்பார்...

அக்காவும் கண்ணை கசக்கி கொண்டு வந்துநிப்பாள்...

அப்பா முடிந்தவரை செய்து கொண்டேயிருந்தாலும் என்ன செஞ்சுட்டீங்க என்று மாமா கேட்பதை நிறுத்துவதாகவேயில்லை...

நான் மீண்டும் போய் படுத்துக்கொண்டேன்...

அதிகாலையில் கதவு தட்டும் சப்தம் போய்திறந்தேன்.. அக்காதான் வந்திருந்தாள்...

என்னக்கா வா மாமாவும் நீயும் சண்ட போட்டுட்டீங்களா என்றேன், அம்மா இருந்திருந்தா இப்படி என்ன விட்டிருப்பாளா? கேட்டு விட்டு உள்ளே வந்தவள் அப்பாவை எழுப்பினாள்....

அப்பா நம்ம நித்தியா பக்கத்து வீட்டு அருணோட ஓடிப் போய்ட்டா பா நேத்து இரவுல இருந்து ரெண்டுபேரையும் காணலை அவர் வேற தாம்தூம்னு குதிக்கிறாரு என்ன பண்றதுனே தெரியலை... கேட்டதும் பதறிப் போய் கிளம்பினோம் மூவரும்.. அங்கே மாமா கத்திக் கொண்டேயிருந்தார்... என்னத்த பொண்ண வளர்த்துவச்சிருக்கீங்க ஒத்த புள்ளைய சரியா வளர்க்க துப்பில்ல உங்க பொண்ணுக்கு என்று எகிறிக் கொண்டு வந்து நின்றார் அப்பாவிடம்...

எனக்கு ஓங்கி ஒரு அரைவிட்டால் என்ன என்று தோண்றியது கட்டுப்படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தேன்... இரு வீட்டாரும் பேசி சண்டைபோட்டுக் கொண்டிருந்தனர்... உன் மகன் தான் சரியில்லை என்று என் அக்காவும்.. உன் மகதான் மயக்கீட்டா என்று அருணின் அம்மாவும் சண்டபோட்டுக்கொண்டிருக்க மாமாவோ அப்பாவை திட்டிக்கொண்டேயிருந்தார்...

அப்பாவும் அமைதியாக கேட்டுக்கொண்டு நின்றிருந்தார்... எங்கே போயிருப்பார்கள் என தேடி கண்டுபிடித்து கொண்டுவந்து நிறுத்திவிட்டு இருவீட்டாரையும் சமாதானம் செய்து வைத்துவிட்டு திருமணம் முறையாக செய்துவிடலாம் என்று பேசி முடிவெடுத்துவிட்டு வீடு திரும்பினோம்...

அப்பா வீட்டுகூரையை வெறித்தபடி அமர்ந்திருந்தார்... என்னப்பா இது பதினெட்டு வயசுல கல்யாணம் பண்ணிக்க தோணுமா இதெல்லாம் சரியா வரும்னு எனக்கு தோணலைபா என்றேன்.

மனதுக்குள் வருத்தம் எனக்கு இத்தனை வருடங்கள் கடந்தும் நான் இன்னும் திருமணம் ஆகாமல் இருக்கிறேன் இதுகளுக்கு இப்பமே கல்யாணம் கட்டிக்க ஆசை வந்திருக்கு என்று கோபமாக இருந்தது...

அப்பா ஏதும் பேசவேயில்லை...

ஏன்பா மாமா அத்தனை திட்டு திட்டுராரு நீ திருப்பி ஒருவார்த்தை கூட கேட்கலை என்று கேட்டேன்....

விடுடா நல்லபடியா வளர்த்து கட்டிக் கொடுத்த எனக்கே அத்தனை திட்டுனா மாப்புள தன் பொண்ண இப்படி கட்டிவைச்சா பக்கத்து வீட்டுல எத்தனை திட்டு வாங்கப்போறாரோ என்று சொல்லி விட்டு சிரித்தார்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## குருதி உறையும் துப்பாக்கி

-- மாயவன் -- மலைமுரசு ஆசிரியர்

அதற்குத் தெரியாது
நான் யார் என்று . . .

ஆதியோடந்தமாய்
ஓடும் உயிர்க் குருதியை . .
அது
தாங்கிச் செல்லும் - என்
ஆழ்ந்த சுவாசத்தை . . .

இருள் கழிந்து – ஓர்
நாளில்
ஒளி நிறைந்த உலகிற்
பிறந்து . . .
நாளாறு மணி நேரமும்
தூங்கி . . . அழுது . . .
பசியுணர்த்திப்
பாலுண்டு . . .
உடல் திருப்பிப் பிரண்டு
தவழ்ந்து . . . நிமிர்ந்தென்
தாய்க் கரம் பற்றி
நடந்து . . . வெண்
பல் வெளித்தள்ளி

குடை நடுவேயிருந்து
கொழுக்கட்டையேந்தி – நான்
அணுவணுவாய் வளர்ந்து
ஆறுடன்நான்கின் - பெருக்கமாய்
அகவைகள் தாண்டி

உன் முன் . . .

ஆடையின்றி
முழங்காலூன்றிக் - கை
பின்னே கட்டிய
என்
பிடறியிற் சூசும்...
உன் வாய்...

மரண முகவரி கூறும்

உன் முன்னே நான் . . .
அம்மணமாய்...

உனக்கென்ன தெரியும்
நான் யார் என்று ? . . .
ஆணியடித்துச் சுவரில்
அவதாரங்களை மாட்டிக்
காலை முழுதும் பூவாய்ந்து –
அதை
கழுவிப் படைத்துச்
சாம்பிராணிப் புகையூட்டி

ஒரு நேர உணவின் - அரைப்
பங்கையுண்டு – என்
வருகைக்காய் காத்திருக்கும்
அம்மாவிடம் கேள் -

நான் யாரென்று ? . . .

உனக்கென்ன தெரியும் . . .

ஒரு தோட்டா உமிழ்ந்து
என் கனவுகளையும்
தலையையும் - ஒரு
சேரச் சிதறடிக்கும்
உனக் கென்ன
தெரியும் - நான் யாரென்று

உதிரம் வழிந்து – ஓடி
உறைந்து போன
இம் மண்ணில் - என்
தாய்
மறுபடியும் ஓர்
மகனைப் பிரசவிப்பாள் . . .

மரணத்தைக் கொன்ற
மனிதர்கள் நாம் . .

மரணத்தைத் தின்ற
மனிதர்கள் நாம் . .

மறுபடியும் பிறப்போம் . . .

பிறகென்ன . . .
என் பிடறியினுள்
உமிழ்
உன் தோட்டவை

நான்
மரணிக்க வேண்டும்

அதன் முன்
இதையாவது
தெரிந்துகொள் - நீ

மறுபடியும் பிறப்பேன் நான்..

## நலமில்லை .....

காத்திருப்பினில் வருத்தம்
சுகமாகத்தான் இருந்தாலும்

உறுதியாக உரியவர்
வருவாரென்பதில் இருப்பைத்
தாங்கும் நாற்காலியும்
பொறுமையை இழக்கின்றதே!

போகலாமென்றால் உடம்பின்
வேதனையின் விம்மல்கள்!!

பொறுப்பானவர் பதிலில்
வருவாரா வரமாட்டாரா
என்பதில் கேள்வியானது
விடையறியாது தவிக்க ....

எழுந்து கால்வலி போக்க
நிமிர்ந்த போது தான் ...
டொக்டருக்கு நலமில்லையென்ற
பதிலும் வந்தது ஆறுதலாய்

காத்திருப்பவருக்கும் நலமில்லை
காத்திருந்தவருக்கும் நலமில்லை
நலமடைய வந்திருந்த உடம்பின்
சொண்டுகள் துடிதுடித்தன

திருமலை சுந்தா



## காதல்

சந்தீபனி

மரம் வாடினால் தண்ணீர் விடுவேன்:
நான் வாளனால் கண்ணீர் விடுவேன்:
நீ வாடினால் ... ...
என் உயிரையே விடுவேன்
புரிந்து கொள் என் காதலை



## சொல்வன்மை

ஒன்றே முக்கால் அடியாலே
உலகை அளந்த திருக்குறளை
நன்றே கற்றல் பொருளோடும்
நாம் பெரிதாகத் தேவையில்லை!

சில சொல்லாலே தீட்டிவிடத்
தெரியாதாரே அங்கிங்காய்ப்
பலசொல்தீட்ட விரும்புவதாய்ப்
பகர்ந்துள்ளார்தம் வள்ளுவனார்!

பேசும் சுருக்கிப் பேசுவதே
பெரும்படிப்பாளர்க்குரியதுவாம்!
மூச்சுத் திணறும் படிநின்றே
மும்மணி பேசின் சலித்திடுமாம்!

கேட்டார்ப் பிணிக்கும் படியாயும்,
கேளார் வேட்கும் படியாயும்
பாட்டோ பேச்சோ இருப்பது தான்
படிப்பாளர் தம் சொல்வன்மை!

- தாமரைத்தீவான் -
[கச்சந்தீவு, கிண்ணியா]

## உன்னால் முடியும் தம்பி

விதி விதியென கதி கலங்கி வீழ்ந்து விடாதே
விவேகத்தை கெட்டியாக அணைத்துக்கொள்
தடைகளைக் கண்டு தரித்து நிற்காதே
பட்டுப் போயிற்றேயென்று பரிதவிக்காதே
துணிவைத் துணையாக்கிக் கொள் துளிர் விடும்

இலக்கு இமையத்தில் அல்ல
இமை மத்தியில் தான்
ஓடி விட்டதா? உன்னை விட்டு
விட்டுத் துரத்து விடாப்பிடியாய்
முட்டி மோதி நிற்கும் உன் சுட்டு விரல் நுனியில்

சுமையேயென சிணுங்காதே
சுகமேயென்பாய் சுகந்தம் வீசும் உன் வாழ்வில்
சோதனைகளைக் கண்டு சோர்ந்து விடாதே
சாதனை படைத்து சரித்திரமாவாய்

தள்ளிப் போடுவதை கிள்ளிப்போடு
எறும்பை எண்ணத்தில் நிறுத்து ஏற்றம் பெறுவாய்
தேனியை திரும்பிப் பார் தித்திக்கும் வாழ்க்கை
தன்னம்பிக்கையை கைவிடாதே சரித்திர நாயகனாவாய்

திருமதி.மா.வேலுப்பிள்ளை
கோபாலபுரம், நிலாவெளி.

# வள்ளுவம் காட்டும் வாழ்வியல் நெறி



முதற் குறட்பாவில் "உலகு" என நினைவூட்டி உலகளாவிய நேயத்தை மறைமுகமாக உணர்த்தியுள்ளார். கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் சண்டையிட்டுக் கொள்ளும் மனிதனுக்கு, அவனது மனமாற்றத்திற்கு வள்ளுவம் ஒரு புதிய ஆன்மீக அறத்தை தந்துள்ளது. இதனை,

வள்ளுவம் கடவுளை நம்புகிறது. ஆனால் அது ஆணும் அல்ல் பெண்ணுமல்ல. வள்ளுவம், காட்டும் கடவுளுக்குக் கோபுரங்கள், கோட்டைகள் இல்லை. வள்ளுவத்தின் கடவுளுக்குக் கணக்கும் இல்லை வழக்கும் இல்லை. அது பேரறிவு தாய்மையான அறிவு குணங்களின் திருவுரு இன்பத்தின் திருவுரு அன்பின் திருவுரு அறத்தின் அடையாளம்! என்னும் அறிஞர் கருத்தும் இதனைத் தெளிவுபடுத்தும்.

**ஈதலறம்**

மனிதப் பண்பினை உயர்த்தும் ஒரு நெறி ஈகை. பிறருக்குக் கொடுத்து மகிழும் மனம் பெற்றால் மனிதன் பக்குவம் அடைந்தவனாகிவிடுவான். போட்டியும், பொறாமையும் அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணமும் மனிதனை மிருக நிலைக்குக் கொண்டு செல்லும். ஈகைக் குணம் ஒன்றே மனிதனை மாண்புடையவனாக்கும். வள்ளுவர் ஈகைக் குணமே உயிரின் ஊதியம் என்பர்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு

கொடுத்துப் புகழடையும் வாழ்க்கையே பயனுடைய வாழ்க்கை என்பதைக் குறள் உணர்த்துகிறது.

காதலறம்

காமத்துப்பால் அறவழிப்பட்ட காதலுறவுகளை எடுத்துரைத்துள்ளது. காதலையும், ஆண்-பெண் உறவையும் வள்ளுவர் நெறிப்படுத்தியுள்ளார். காமத்துப்பாலில் காதல், காதலர் உறவு நிலை ஆகியவற்றை இனிமை பயக்கப் பாடி, அன்பெனும் நெறிக்குள், மணங்களின் சங்கமத்திற்குள், மாசுபடாத வாழ்வியல் படிநிலையை வகுத்துத் தந்துள்ளார். களவையும் கற்பையும் வகைப்படுத்தி "மனிதம்" அடையும் வாழ்க்கை நெறியை வள்ளுவர் தந்துள்ளார்.

பிறன்மனை நயத்தலையும், பரத்தையர் உறவையும், பெருங்குற்றமாகச் சொல்லி அன்புடைய காமத்தைச் சமுதாய அறமாகத் தந்துள்ளார்.

**ஆண் - பெண் சமனியம்**

ஆண் - பெண் உறவு நிலை, திருமணத்திற்கு முன்னும் பின்னுமாகக் காதல் நிலை ஆகிய செய்திகளைக் குறள் விரிவாகப் பேசுகிறது. ஆண் - பெண் சமத்துவம் வள்ளுவரின் கொள்கையாகக் காணப்படுகிறது.

ஆண் மேலாதிக்க காலத்தில், அதற்கெதிரான, துணிவுடைய சிந்தனைகளை வழங்கியுள்ள வள்ளுவரின் அணுகுமுறை புரட்சிகரமானது. பெண்களின் உரிமைக்காகவும், உலகியல் மாற்றத்திற்காகவும் அவர் பாடுபட்டுள்ளார். பெண் ஆணுக்கு இணையானவள். ஆற்றல் மிக்கவள் என்பதை,

சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை

என்று ஆற்றலும் அறிவும் நிறையும் மிக்க பெண்களை உலகுக்கு உருவாக்கித் தந்தவர் வள்ளுவர் எனலாம். இத்தகைய வள்ளுவரின் வழிகாட்டல்தான் பிற்காலத்தில் பாவலன் பாரதியை "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்று பாட வைத்தது எனலாம்.

**சமுதாயக் கொடுமைகள்**

சாதி, மதத்தின் பெயரால் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் சமுதாயக் கொடுமைகள். இதனை மாற்ற வள்ளுவரின் குறட்பாக்கள் முனைந்துள்ளன. பிறப்பால் இனம் பிரித்த வருணாசிரம முறையை வள்ளுவம் எதிர்க்கிறது. பிறப்பால் அனைவரும் ஒன்றே என ஒலிக்கிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

என்னும் குறட்பா வள்ளுவரை ஒரு சமுதாயப் புரட்சியாளராக அடையாளம் காட்டுகிறது.

வள்ளுவரைத் தமிழ்கூறும் உலகில் தோன்றிய முதல் "பகுத்தறிவாளர்" எனக் கூறலாம். எந்தவொரு கருத்தையும், சிந்தனையையும் உள்ளவாறு ஏற்காமல் பகுத்து நோக்கி, உள்ளத் தெளிவு பெற்று ஏற்க வேண்டும் என்பதே வள்ளுவர் கொள்கை.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்னும் குறட்பாக்கள் இதற்குச் சான்றாகும்.

மானுடத்தின் மலர்ச்சி

வள்ளுவரின் நெம்புகோல் அடிகள் மானுடத்தின் மலர்ச்சி எனலாம். மரபுகளைத் தகர்த்துப் புதுமையை நிலை நிறுத்துவது வள்ளுவரின் சமுதாயப் பணியாக இருக்கிறது.

அந்தணர் என்போர் அறவோர்
அன்பின் வழியது உயிர்நிலை
மனநலம் மன்னுயிர்க்குக் காக்கம்
அறத்தால் வருவதே இன்பம்

என்றெல்லாம் உயரிய சிந்தனைகளை வழங்கி மனித வாழ்க்கையை மலர்ச்சியடையச் செய்தவர் வள்ளுவர் ஒருவரே எனலாம்.

முற்றும்......

முனைவர் நா. தனராசன்
முதுநிலை விரிவுரையாளர் தமிழ்த்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு



## பயப்படும் நயன்

வெங்கட் பிரபு இயக்கும் மாஸ் படத்தில் சூர்யாவும் நாயகியாக நயன்தாரா நடிக்கின்றனர். இன்னொரு நாயகியாக நடிக்க சுருதி ஹாசனை முதலில் தேர்வு செய்தனர். பிறகு திடீரென அவரை நீக்கி விட்டு எமிஜாக்சனை ஒப்பந்தம் செய்தார்கள். இப்போது அவரும் நீக்கப்பட்டுள்ளார். புதிதாக ப்ரணிதாவை தேர்வு செய்துள்ளனர். இதற்கு முழுக் காரணமும் நாயகி நயன் அவர்களை வேண்டாம் எனக் கூறியதே ஆகும்.



## ருத்ரமாதேவியில் ருத்திரம்



மெட்ராஸ் படத்தின் மூலம் தமிழ் சினிமாக்கு அறிமுகமானவர் கேத்ரினா. இவர் அனுஷ்கா நடித்து வரும் ருத்ரமாதேவி படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் இருவரும் சேர்ந்து நடனமாடுவது போல் ஒரு காட்சி இடம்பெறுகிறதாம். இதில் இருவருக்கும் ஒரு கட்டத்திற்கு மேல் நிஜமாகவே போட்டி ஆரம்பித்து விட்டதாம். அனுஷ்கா ஒவ்வொரு முறையும் தான் நன்றாக ஆடியிருக்கேனா? என்று பார்த்த பின் தான் அடுத்த காட்சிக்கு செல்வாராம்.

## பைக்கில் தளபதி - தல அறிவுரை



விஜய் தினமும் படப்பிடிப்பிற்கு தான் சமீபத்தில் வாங்கிய Harley Davidson மோட்டார் பைக்கில்தான் வருவதாக செய்திகள் வெளிவந்துள்ளது. தினமும் காலையில் தனது பைக்கில் முகத்தை கர்சிப் கொண்டு மூடிக்கொண்டு பைக்கில் செல்வதை பார்த்த அவரது ரசிகர்கள் புகைப்படங்கள் எடுத்து, அந்த படங்களை பேஸ்புக் மற்றும் டுவிட்டரில் பதிவு செய்து வருகின்றனர். இந்நிலையில் இந்த புகைப்படங்களை இண்டர்நெட்டில் பார்த்த தல அஜீத், விஜய்யிடம் ஹெல்மெட் மாட்டிக்கொண்டு பைக் ஓட்டும்படி அறிவுரை கூறியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

## மைக்கல் ஜாக்சனின் நினைவு



சூர்யா நடித்து வரும் மாஸ் திரைப்பட படப்பிடிப்பு சென்னையை சுற்றி நடந்து வருகிறது. இது ஒரு த்ரில்லர் காமெடி டைப் படம் என்று கூறப்படுகிறது. இந்நிலையில், மறைந்த மைக்கேல் ஜாக்சனுக்கு மரியாதை செய்யும் விதமாக 'மாஸ்' படத்தின் பாடல் ஒன்றில் மறைந்த அவருடைய புகழ்பெற்ற வரிகளை பயன்படுத்த இருக்கிறாராம் யுவன்ஷங்கர் ராஜா.

## காதல் தோல்வியா



எம்.ராஜேஷ் இயக்கி வரும் ஆர்யாவின் "வாசுவும் சிவாவும் ஒண்ணா படிச்சவங்க" என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் சென்னையில் நடந்தபோது பத்திரிகையாளர் ஒருவர் படப்பிடிப்பின் இடையே புகுந்து தமன்னாவிடம் காதல் தோல்வி குறித்து கேள்வி கேட்டுள்ளார். இதனால் அப்செட் ஆன தமன்னா உடனடி படப்பிடிப்பில் இருந்து வெளியேறியுள்ளார்.

## சிவா - சிம்பு



சிவகார்த்திகேயன் தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் முன்னணி நடிகர். ஆனால், இவர் நடித்த சில படங்களிலேயே ஆர்யா, ஜீவா என அனைவரையும் ஓரங்கட்டிவிட்டார். தற்போது இவர் நடிப்பில் வெளிவரவிருக்கும் காக்கிசட்டை படத்தை டிசம்பர்-25ம் தேதி ரிலீஸ் செய்ய உள்ளனர். அன்றைய தினத்திலேயே சிம்பு நடித்த வாலு திரைப்படமும் வரவிருக்கிறது. சிவா முதன் முறையாக பெரிய நடிகர் ஒருவருடன் போட்டி போட உள்ளார். வெற்றி யாருக்கு என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## ஜீ.வி - விஜய் இணையம்



கத்தி படத்திற்குப் பிறகு விஜய், சிம்பு தேவன் இயக்கத்தில் நடித்து வருகிறார். இதில் சுருதிஹாசன் மற்றும் ஹன்சிகா நடித்து வருகிறார்கள். மேலும் சுதீப் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

இப்படத்திற்குப் பிறகு அட்லி இயக்கும் படத்தில் விஜய் நடிக்கவுள்ளார். "ராஜா ராணி" படத்தில் அட்லியுடன் கைகோர்த்த இயைமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் இப்படத்திற்கும் இசையமைக்கவுள்ளார்.

## என் கணவர் சல்மான் தான்



டென்னிஸ் சானியா மிர்சா, சமீபத்தில் சல்மான் கான் தான் என் கணவர் என்று கூறியது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஆனால், அவர் சொன்ன வந்த கருத்து என் வாழ்க்கையை படமாக எடுத்தால், என் கணவர் கதாபாத்திரத்தில் சல்மான் தான் நடிக்க வேண்டும்' என்று தான் கூறியுள்ளார்.

**என்னைக் கண்டுபிடியுங்க பார்ப்போம்**


சென்ற வாரம்



## திரை விமர்சனம்

### இயக்குனர் சக்தி சௌந்தராஜனின் நாய்கள் ஜாக்கிரதை

#### சிபி, அருந்ததி நடிக்கும்



போலீஸ் அதிகாரியான சிபி, ஒரு பெண் கும்பலால் கடத்தப்படுவதை அறிந்து அவர்களுடன் போராடி அந்த பெண்ணை காப்பாற்றுகிறார். அப்போது நடக்கும் துப்பாக்கி சண்டையில் சிபிக்கு காலில் குண்டு பாய்கிறது. இதனால் வீட்டில் மனைவி மற்றும் தங்கையுடன் ஓய்வு எடுக்கிறார். இந்நிலையில் பக்கத்து வீட்டில் வசிக்கும் ஒருவர் தான் வெளியூர் செல்வதால் தான் வளர்த்து வரும் நாயை நான்கு நாட்கள் பார்த்துக்கொள்ளும்படி கூறுகிறார். சிபி இதற்கு மறுக்கவே சிபிக்கு தெரியாமல் அந்த நபர் சிபியின் வீட்டில் நாயைக் கட்டிப்போட்டுவிட்டு சென்றுவிடுகிறார்.

வெளியூர் போன பக்கத்து வீட்டுக்காரர் எதிர்பாராதவிதமாக இறந்துவிடுவதால் நாயை வளர்க்கும் பொறுப்பு சிபியின் மீது விழுகிறது. இந்நிலையில் அந்த நாய் ராணுவ முகாமில் பயிற்சி பெற்றது என்றும் மிகுந்த திறமை வாய்ந்தது என்றும் தெரிய வருகிறது.

இந்நிலையில் சிபியால் பாதிக்கப்பட்ட கடத்தல் கும்பல் சிபியின் மனைவியை அவர் இல்லாத நேரத்தில் கடத்திவிடுகிறது. மனைவி உயிருடன் வேண்டுமென்றால் பெருந்தொகை ஒன்றை தரவேண்டும் என கடத்தல் கும்பல் கூறியதால் பணத்தை கொடுத்து மனைவியை மீட்க செல்கிறார். பணத்துடன் செல்லும் சிபிக்கு தன் மனைவி ஒரு சவப்பெட்டியில் உயிருடன் புதைக்கப்பட்டது தெரிய வருகிறது. ஆறு மணி நேரம் மட்டுமே தனது மனைவி உயிரோடு இருக்க வாய்ப்பு உள்ளது என்ற நிலையில் நாயுடன் இணைந்து மனைவியை மீட்க புறப்படுகிறார் சிபி. மனைவியை மீட்டாரா? கடத்தல் கும்பல் என்ன ஆனது? என்பது தான் மீதிக்கதை.



நீண்ட இடைவெளிக்கு பின்னர் ரீ எண்ட்ரீ ஆகியுள்ளார் சிபி. சிபியின் மனைவியாக வரும் அருந்ததிக்கு அதிக வேலையில்லை எனினும் கொடுத்த கேரக்டரை சரியாக செய்துள்ளார். நாய்க்கு டிரைனிங் கொடுத்தவரை தாராளமாக பாராட்டலாம். தெளிவான திரைக்கதையுடன் களமிறங்கியுள்ளார் இயக்குனர் சக்தி சௌந்தராஜன். மொத்தத்தில் படத்தை ஒருமுறை பார்க்கலாம்.

## சினிமா கிசு கிசு



- அடுத்த மாதம் 12-ந்தேதி ரஜினி பிறந்த நாள் அன்று லிங்கா படத்தை ரிலீஸ் செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன. இதற்காக டப்பிங் ரீ ரெக்கார்டிங் பணிகள் விறுவிறுப்பாக நடக்கின்றனவாம்.
- ஜோதிகா நடிக்கும் படத்தில் முதலில் கிளைமாக்ஸ் காட்சியை டைரக்டர் ரோஷன் ஆண்ட்ரூஸ் படமாக்கி வருகிறார். தற்போது இந்தப் படத்தில் புதிதாக அபிராமி இணைந்துள்ளார்.
- தெலுங்கு படவுலகம் விஜய் மீது தடை விதித்ததால் அதிருப்தி கொண்ட ஸ்ருதிஹாசன் மகேஷ்பாபுவுடனான படத்தில் இருந்து விலகியதாகவும், விஜய் மீதான தடை விலகும்வரை இனி தெலுங்கு படங்களில் நடிக்க மாட்டேன் என அவர் கூறியதாகவும் செய்திகள் வெளியாகின்றன.
- சூர்யா நடித்து வரும் மாஸ் திரைப்படத்தின் முக்கியமான சண்டைக்காட்சி ஒன்று சென்னையில் எடுக்கப்பட்டு வருகிறது. சூர்யாவை காண ரசிகர்கள் கூட்டம் கூட்டமாக வர, படக்குழுவிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பின் போலிஸார் உதவியுடன் படப்பிடிப்பை நடத்தியுள்ளனர்..
- விஷால், ஆரம்பம், கத்தி போன்ற பிரம்மாண்ட படங்களின் போதும் தன் படமான பாண்டிய நாடு, பூஜை படத்தை ரிலிஸ் செய்து ஹிட் கொடுத்தார். தற்போது மீண்டும் அஜித்துடன் இந்த பொங்கலுக்கு ஆம்பள படத்தின் மூலம் மோதவுள்ளார்.
- கமர்ஷியல் படங்களில் மட்டுமே நடிக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. நானும் மேக்கப் இல்லாமல் நடிக்க தயாராகி விட்டேன். மேக்கப் போடாமல் இருந்தால், முகம் எப்படி இருக்கும் என்று தெரியும் என்கிறார் இலியானா.
- "டிரான்ஸ்போர்டர்" என்ற தலைப்புகளில் வெளிவந்த ஹாலிவுட் படங்களில் ஸ்டண்ட் மாஸ்டராக பணியாற்றிய சீனாவை சேர்ந்த சாங் லின் தளபதியின் படத்திற்கு சண்டை காட்சிகளை அமைக்கிறார்.
- "நான் லத்திகா படத்தில் மிகவும் சிரமப்பட்டு நடித்தேன், இப்படத்தை 100 நாள் ஓட்ட என்ன செய்ய வேண்டும் என்றேன், டிக்கெட் இலவசமாக தரலாம். கோழி பிரியாணி வாங்கி தரலாம் என்றார்கள். அதையெல்லாம் வாங்கி கொடுத்து தான் இந்த இடத்திற்கு வந்துள்ளேன்" என்று மேடையிலேயே மனம் திறந்துள்ளார் பவர் ஸ்டார்.
- தற்போது ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பிரசன்னர் நடிகர் சிபிராஜுடன் பங்கேற்றார். அப்போது "ஷங்கர் சார் என்னையும், சிபிராஜையும் வைத்து படம் எடுக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

## Mobile

### UBUNTU NEW

Meizu நிறுவனம் அண்மையில் MX4 மற்றும் MX4 Pro எனும் ஸ்மார்ட் கைப்பேசிகளினை அறிமுகம் செய்திருந்தது. இவை இரண்டும் அன்ரோயிட் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இக்கைப்பேசிகளை Ubuntu இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக மீண்டும் 2015ம் ஆண்டின் ஆரம்பத்தில் அறிமுகம் செய்யவுள்ளதாக

### S5 பின்னடைவில்

சம்சுங் நிறுவனம் தனது S தொடர் ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகம் செய்து குறுகிய காலத்தில் கைப்பேசி உலகில் சிறந்த இடத்தைப் பிடித்திருந்தது. எனினும் கடந்த ஏப்ரல் மாதத்தின் பிற்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட Galaxy S5 ஸ்மார்ட் கைப்பேசியானது Galaxy S4 கைப்பேசி விற்பனையிலும் பார்க்க மந்தமாக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## Other

### ஒப்பந்த முடிவு

அப்பிள் நிறுவனம் 2007ம் ஆண்டில் முதலாவது iPhone ஐ அறிமுகம் செய்ததிலிருந்து iOS இயங்குதளங்களில் இயல்புநிலை (Default) தேடு இயந்திரமாக கூகுளை தேர்வு செய்திருந்தது. இதனைத் தொடர்ந்து அப்பிள் மற்றும் கூகுள் நிறுவனங்கள் 2010ம் ஆண்டில் இதற்காக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. இதன்படி 2015ம் ஆண்டில் இந்த ஒப்பந்தம் முடிவடைவதால் 2015ம் ஆண்டிலிருந்து Yahoo அல்லது Bing இனை அப்பிளின் மொபைல் சாதனங்களில் இயல்புநிலை தேடுபொறியாக பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

### கையாலேயே கட்டுப்படுத்தலாம்



கை அசைவுகளின் மூலம் தொலைக்காட்சிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய புதிய சாதனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. Onecue எனும் இச்சாதனம் மூலம் தொலைக்காட்சிகள் தவிர Cable Box DVR, Apple TV மற்றும் WiFi மூலம் செயற்படக்கூடிய மின்குமிழ்கள் என்பவற்றினையும் கட்டுப்படுத்த முடியும். இதனை 2015ம் ஆண்டின் முற்பகுதியில் இருந்து கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### கட்டழகுக்காக ஃபோன்



கட்டழகாகவும், ஆரோக்கியமாகவும் உடலை பேண ஆசைய எனப்படும் ஸ்மார்ட் பிரேஸ்லெட் உருவாக்கப்பட்டுள்ளது. விசேட மென்பொருளினைப் பயன்படுத்தி மொபைல் சாதனங்களின் உதவியுடன் பயன்படுத்தக்கூடியது.

### புளூடூத் சமையல்



சுவையாக சமைப்பதற்காக Pantelligent எனும் பான் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை Pantelligent எனும் விசேட ஸ்மார்ட் கைப்பேசி அப்பிளிக்கேஷன் மூலம் புளூடூத் ஊடாக கட்டுப்படுத்த முடியும். இந்த அப்பிளிக்கேஷனில் விதம் விதமான உணவுகளை சுவையாக சமைக்கும் படிமுறைகள் காணப்படுகின்றன. அத்துடன் சமையலை இந்த அப்பிளிக்கேஷன் மூலம் கண்காணிக்கும் வசதியும் காணப்படுகின்றது.

### பாதுகாப்பு உலாவி

கூகுள் நிறுவனத்தின் குரோம் இணைய உலாவிக்கு நிகரான பாதுகாப்பு மிகுந்த Aviator எனும் புதிய இணைய உலாவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

## Information Technology

### அன்ரொயிட் – ஆபிஸ்

மைக்ரோசொப்ட் நிறுவனம் அன்ரோயிட் சாதனங்களுக்கான Office அப்பிளிக்கேஷனிற்கான அப்டேட்டினை அறிமுகம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளது. இப்புதிய பதிப்பானது ஒன்லைன் ஸ்டோரேஜ் சேவைகளான OneDrive மற்றும் Dropbox ஆகியவற்றுடன் நேரடியாக கோப்புக்களை பரிமாறிக்கொள்ளும் வசதியைக் கொண்டுள்ளதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்ற வசதிகளுடன் iOS சாதங்களுக்கான அப்டேட்டினையும் விரைவில் அறிமுகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### இணைப்பு இல்லா நிலையிலும்



Blinkbox எனும் ஒன்லைன் வீடியோ (Streaming) சேவையினை வழங்கிவரும் Tesco நிறுவனம் தற்போது புதிய வசதி ஒன்றினை பயனர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது. இதன்படி இணைய இணைப்பு இல்லாத நிலையிலும் (Offline) தொலைக்காட்சி நிகழ்ச்சிள், திரைப்படங்களை பார்வையிடல், தரவிறக்கம் செய்தல் போன்ற வசதியை தரவுள்ளது. இவ் வசதியினை iOS மற்றும் Android சாதனங்களில் பயன்படுத்த முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.


### முப்பரிமாண கை



இத்தாலியைச் சேர்ந்த தொழில்நுட்ப வடிவமைப்பாளர் ஒருவர் 3D பிரிண்ட் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி பயோனிக் கை ஒன்றினை உருவாக்கியுள்ளார். YouBionic என அழைக்கப்படும் இக்கையானது விசேட மென்பொருள் ஊடக கட்டுப்படுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. விரல்களை இழந்தவர்கள் இக்கையினைப் பொருத்தி அதனை ஸ்மார்ட் கைப்பேசிகளின் உதவியுடன் கையாள முடியும்.

# சாமியாரின் ஆசிரமத்தில் மசாஜ் அறைகள்

## தீவிரவாதியா?... சில்மிசக்காரரா?... சாமியாரா?... பகல் வேசதாரியா?...



கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சாமியார் ராம்பாலின் ஆசிரமம், குளு குளு அறைகள், மசாஜ் படுக்கைகள், நீச்சல் குளம், பிரம்மாண்ட டி.வி. திரைகள், குண்டு துளைக்காத பூஜை அறை, உடற்பயிற்சிக் கூடம், நகைப் பெட்டகங்கள் என அரண்மனைக்கு இணையான சொகுசு வசதிகளுடன் சொர்க்கபுரியாக திகழ்ந் துள்ளது.

கடந்த 2006-ல் நடைபெற்ற கொலை வழக்கு தொடர்பாக 43 முறை நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியும் ஆஜராகாமல் 3 முறை பிடிவாரன்ட் பிறப்பிக்கப்பட்ட பிறகும் முரண்டுபிடித்த ஹரி யாணா மாநில சாமியார் ராம்பாலை அந்த மாநில போலீஸார் கடந்த புதன்கிழமை கைது செய்தனர். அப்போது போலீஸாருக்கும் சாமியாரின் ஆதரவாளர்களுக்கும் இடையே நடைபெற்ற 'போரில்' 6 பேர் உயிரிழந்தனர். 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவரது ஆசிரமத்தில் போலீஸார் சோதனை நடத்தியபோது அதிர வைக்கும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

### *12 ஏக்கரில் பிரம்மாண்ட ஆசிரமம்*

ஹரியாணா மாநிலம் சோனிபட் மாவட்டம் தானா கிராமத்தில் 1951 செப்டம்பர் 8-ம் தேதி நடுத்தர வர்க்க குடும்பத்தில் ராம்பால் பிறந்தார். டிப்ளமோ இன்ஜினியரிங் படித்த அவர் அந்த மாநில அரசின் நீர்ப்பாசனத் துறையில் சிறிதுகாலம் பணியாற்றினார்.

தீவிர அனுமார் பக்தரான அவர் அரசுப் பணியில் இருந்து நீக்கப்பட்டார். பின்னர் ஆன்மிகப் பாதைக்கு திரும்பினார். 1999-ல் சட்லக்கில் தனது முதல் ஆசிரமத்தை தொடங்கினார். பின்னர் ரோட்டக், பர்வாலா பகுதிகளிலும் ஆசிரமங்களை அமைத்தார். இதில் சட்லக் ஆசிரமம், சண்டிகர்- ஹிசார் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் 12 ஏக்கர் பரப் பளவில் 5 மாடிகளுடன் அரண்மனை போன்று கட்டப்பட்டுள்ளது.

ஆசிரம வளாகம் முழுவதும் கிரானைட் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இங்கு சாமியார் ராம்பாலுக்காக பல்வேறு தனி அறைகள் உள்ளன. அவற்றில் குளிர்சாதன வசதி, மசாஜ் படுக்கைகள், பிரம்மாண்ட டி.வி. திரைகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆசிரமத்துக்குள் நவீன கருவிகளுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம், 25 மீட்டர் நீளம் கொண்ட நீச்சல் குளம், 24 குளிர் சாதன அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

குண்டு துளைக்காத கூண்டு, மற்றும் ஆசிரமத்தில் 50,000 பேர் வரை தங்கும் வசதி உள்ளது. ஒரு லட்சம் பேருக்கு சமைக்கக்கூடிய வகையில் மிகப் பெரிய சமையல் அறை உள்ளது. இங்கு ஒரு மாதத்துக்கு தேவையான சமையல் பொருள்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. ஒரே நேரத்தில் 10 ஆயிரம் பேர் அமர்ந்து சாப்பிடும் உணவுக் கூடம் உள்ளது.

ஆசிரமத்துக்கு வரும் பக்தர்கள் தங்களின் செல்போன்களை சார்ஜ் செய்து கொள்ள தனியாக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ராம்பாலுக்காக பிரத்யேகமாக பூஜை அறை உள்ளது. இங்கு பெண் பக்தர்களுக்காக தனி வரிசைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த பூஜை அறை அருகே நகைப் பெட்டகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆசிரம வளாகத்தில் பிரம்மாண்ட மைதானம் உள்ளது. இங்குள்ள உயரமான மேடையில் குண்டு துளைக்காத கூண்டில் இருந்து ராம்பால் சொற்பொழிவாற்றுவார். அவரது உரையைக் கேட்க வசதியாக ஆங்காங்கே பிரம்மாண்ட திரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### *400 கமாண்டோ வீரர்கள்*

வெளியில் செல்வதற்காக குண்டு துளைக்காத புல்லட் புரூப் கார்களை ராம்பால் பயன்படுத்தியுள்ளார். அவரின் பாதுகாப்புக்காக 400 பேர் கொண்ட சிறப்பு கமாண்டோ படை இருந்துள்ளது. ஆசிரமம் முழுவதும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. வெளி நபர்கள் ஆசிரமத்துக்குள் நுழைய முடியாத வகையில் 20 அடி உயரத்துக்கு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. வெளியில் ஆங்காங்கே கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஆசிரம வாயிலில் 4 மெட்டல் டிடெக்டர் கதவுகள் உள்ளன. அதன்வழியாகவே பக்தர்கள் உள்ளே நுழைய அனுமதிக்கப்பட்டனர்.

### *ரகசிய ஆயுதக் கிடங்கு*

ஆசிரமத்தின் இரண்டு ரகசிய அறைகளில் ஏராளமான துப்பாக்கிகள், பெட்ரோல் குண்டுகள், கையெறி குண்டுகள், ஆசிட் குப்பிகள் என சிறிய அளவிலான போரை நடத்துவதற்கு தேவையான ஆயுதங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளன.

ஹெல்மெட், கைத்தடிகள், கருப்பு நிற சீருடைகள் அலமாரிகளில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அங்குள்ள 2 டேங்க்குகளில் 800 லிட்டர் டீசல் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது. துப்பாக்கிகள் அனைத்திலும் தோட்டாக்கள் நிரப்பப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அங்கு சாமியாரின் கமாண்டோ படை வீரர்கள் தங்குவதற்காக தனி அறைகளும் உள்ளன.

சிறிய ராணுவத்துக்கு தேவையான வகையில் ஆயுதங்கள் குவித்து வைக்கப்பட்டிருப்பது பேரதிர்ச்சி அளிப்பதாக ஹரியாணா போலீஸார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து போலீஸார் மேலும் கூறியபோது, சாமியாரை கைது செய்யவிடாமல் தடுத்து வன்முறையில் ஈடுபட்டதாக இதுவரை 865 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர், அவர்களிடம் ரகசிய ஆயுதக் கிடங்கு குறித்து தீவிரமாக விசாரணை நடத்தி வருகிறோம், இதன்மூலம் மேலும் பல்வேறு தகவல்கள் வெளிவரும் என்று தெரிவித்தனர். தற்போது சட்லக் ஆசிரமம் பாலைவனம்போல் காட்சியளிக்கிறது.

சாமியார் ராம்பாலின் ஆசிரமத்துக்கு பெண் பக்தர்கள் ஏராளமாக வந்துள்ளனர். இந்நிலையில் ஆசிரமத்தில் நடத்தப்பட்ட சோதனையில் கர்ப்ப சோதனை கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஆசிரமத்தில் வெளிப்புறமாக பூட்டப்பட்ட குளியல் அறையில் பெண் ஒருவர் மயக்க நிலையில் மீட்கப்பட்டுள்ளார். அவர் மத்தியப் பிரதேசம் அசோக் நகரைச் சேர்ந்த பிஜிலேஜ் என தெரியவந்துள்ளது.

w.w.w.theindependent.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய செய்திச் சுருக்கம்

- **நீர்த்தேக்க வான் கதவுகள் திறப்பு**

அதிக மழையுடன் கூடிய காலநிலை காரணமாக நாட்டில் உள்ள பல நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும் மஹகனதராவ, ராஜாங்கணை, திசாவாவி, மஹவிலாச்சி உள்ளிட்ட நீர்த் தேக்கங்கள் பலவற்றின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- **வெடிமருந்துடன் மூவர் கைது**

புத்தளம் பகுதியைச் சேர்ந்த இவர்கள் யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்குவதற்காக முச்சக்கர வண்டியில் வைத்து குறித்த வெடி மருந்துகளைக் கொண்டு வந்துள்ளனர். இந்தநிலையில் கச்சேரிக்கு முன்பாக பயணித்துக் கொண்டிருந்த சந்தேகநபர்களை, யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தலைமையிலான புலனாய்வாளர்கள் கைதுசெய்துள்ளனர்.

- **சட்ட விரோதப் பயணம் தடுப்பு**

இலங்கையின் சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்ற நிலையில், அவுஸ்திரேலிய கடற் பாதுகாப்பு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட படகு ஒன்று இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியாவுக்கு அருகிலுள்ள கடற்பரப்பில் குறித்த படகு கைப்பற்றப்பட்டுள்ளது.

- **நடுத்தெருவில் வைத்தாவது கைச்சாத்திடப்படும்.**

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான எதிர்க்கட்சிகளின் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு இடமளிப்பதை தடுக்கும் முயற்சிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர எமக்கு உரிய இடம்கிடைக்காது போனால் நடுத்தெருவில் அமர்ந்தாவது எதிர்வரும் திங்கட்கிழமை கைச்சாத்திடுவோம் எனத்தெரிவித்தார்.

- **எம் பூரண ஆதரவு மகிந்தவுக்கே - பொது பல சேனா**

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெற இருக்கும் ஜனாதிபதி தேர்தலில் பொதுபல சேனா ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு பூரண ஆதரவு வழங்க உள்ளதாக சற்று முன்னர் அறிவித்துள்ளது. பொதுபல சேனா தலைமை யகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தெரிவித்துள்ளார்.

- **காட்டு யானை தாக்கி ஒருவர் பலி**

காட்டு யானையின் தாக்குதலில் பலத்த காயமடைந்த நபர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

- **அரச சொத்துக்களை இனி பாவிக்கவேண்டாம்**

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரச சொத்துக்களை பயன்படுத்தக்கூடாது



என்றும் அரச ஊழியர்கள் மற்றும் சேவையாளர்களுக்கு நியமனம் வழங்குதல், பதவி உயர்வு, இடமாற்றம் மற்றும் மட்டுப்படுத்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளதாவும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

- **கொலை வழக்கொன்றில் சார்ஜண்ட் கைது**

2010ம் ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றை மறைக்க விசாரணைகளின் போது, பொய் சாட்சியங்களை முன்வைத்ததாக குற்றம்சாட்டப்பட்டு பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தநிலையில் குறித்த வழக்கில் ரயில் ஓட்டுனர் என போலிப் பெயர் ஒன்றில் குறித்த சார்ஜன் சாட்சிகளைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- **குற்றவாளிகளின் பைல்களும் மஹிந்தவிடமே**

நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி ஏன் போதைபொருளை கொள்கலனின் மூலம் நாட்டுக்கு கொண்டுவந்தவர்களை கைது செய்யவில்லை. இந்த நாட்டில் உள்ள அனைத்து போதை பொருள் கடத்தல்காரர்களின்,குற்றம் செய்த அமைச்சர்கள், அவர்களின் மகன்மார்களின் பைல்களும் ஜனாதிபதியிடம் தான் இருக்கிறது.

- **பாகிஸ்தானுக்கு அழைப்பு**

பாகிஸ்தானுக்கு விரைவில் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்'வுக்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப் அழைப்பு விடுத்துள்ளார். நேபாளம் காத் மண்டுவில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியபோதே பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

- **அருங்காட்சியத்தினுள் சென்றோர் தேடலில்**

தேசிய அருங்காட்சியகத்தினுள் திருடர்கள் நுழைந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் குறிப்பிடுகின்றனர். அருங்காட்சியகத்தின் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த 74 பேரின் விரல் அடையாளங்கள் பகுப்பாய்விற்காக அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார். இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் அருங்காட்சி யகத்தினுள் நான்கு கைவிரல் அடையாளங்களும், மற்றுமொரு தடயமும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- **துப்பாக்கித் தாக்குதல் செய்தவரின் வாகனம் கண்டுபிடிப்பு**

எதிர்கட்சிகளின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவின் பெயர் அறிவிக்கப் பட்டதன் பின்னர், களுத்துறை - மக்கொன பகுதியில் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் ஒருவர் மீது துப்பாக்கி தாக்குதல் நடத்தியவரின் வாகனம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

- **மீன் வலையில் ஏ.கே**

யாழ்ப்பாணம், பருத்தித்துறை கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில், ஏ.கே 47 ரக துப்பாக்கியொன்று சிக்கியுள்ளது.

வியாபாரிமூலை பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை செல்வராசா என்ற மீனவரின் வலையிலே இந்த துப்பாக்கி சிக்கியுள்ளது. இது தொடர்பில், பருத்தித்துறை பொலிஸில் தகவல் வழங்கிய மேற்படி மீனவர், வலையில் சிக்கிய துப்பாக்கியையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

- **கைது செய்யக் கோரி பதற்றம்**

கடந்த மாதம் இறக்குவானை டெல்வின் பிரிவில் 16 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்து தப்பி சென்ற இளைஞனை கைது செய்யுமாறு டெல்வின் பிரிவை சேர்ந்த இளைஞர்களும் தோட்ட மக்களும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

- **பணிப் பகிஷ்கரிப்பு**

காலி மாவட்டத்தில் ஆதார மற்றும் போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் உள்ள ஊழியர்களும் இன்று முதல் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றை மேற்கொள்ள தீர்மானித்துள்ளனர்.

- **பிரத்தியேக வகுப்புக்களுக்குத் தடை**

எதிர் வரும் டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்வி பொதுத் தராதர சாதரணதரப் பரீட்சைகள் நடைபெறவுள்ளமையால் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை சாதாரணதர மாணவர்களுக்கான வகுப்புக்களோ கருத்தரங்குகளோ நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

- **ஐ.நா கண்காணிக்க வேண்டும்.**

இலங்கையில் தேர்தல் வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற நிலையில் அதிகளவாக சிறுபான்மையினருக்கு எதிரானவையாகவே இருக்கின்றது. ஆகவே இந்த நிலவரங்களை ஐக்கிய நாடுகள் கண்காணிக்கவேண்டும் என்று மன்னிப்புசபை கோரியுள்ளது.

- **யாருக்கு ஆதரவு**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு என்பது தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை அறிவிக்கவுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் அரசியல் குழுத் தலைவரும் பிரதியமைச்சருமான வே. இராதாகிருஷ்ணன் வீரகேசரி இணையத்தளத்துக்குத் தெரிவித்தார்.

- **பொருளாதார தடை விதிக்க ஆலோசனை**

இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணையாளர்களை நாட்டிற்குள் அனுமதிக்காவிடின் இலங்கைக்கு எதிராக பொருளாதார தடை விதிக்கும் யோசனையை பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ளனர்.

சர்வதேச விசாரணைகள் ஆரம்பமாகி சில மாதங்களாகிவிட்டதையும், அந்த விசாரணை மீது ஏற்படுத்தப்பட்டுள்ள முட்டுக்கட்டைகளையும் கருத்தில் கொள்ளும்போது இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணையாளர்களை தனது நாட்டிற்குள் அனுமதிக்கச் செய்வதற்காக, பொருளாதார தடைகள் உட்பட சகல சாத்தியப்பாடுகளையும் பிரித்தானியா பரிசீலிக்க வேண்டும்.

# நிகழ்வுகள்

## இயந்திரப் படகு கையளிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் மழை பெய்து வருகின்றமையினால் இவ்வருடம் ஏற்படக்கூடிய வெள்ள அனர்த்தத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் கன்டிகப் இன்ரநெஷனல் நிறுவனத்தால் 40 குதிரை வலு கொண்ட இயந்திமும் படகும் அரசாங்க அதிபர் திருமதி. எஸ்.எம்.சார்ள்ஸிடம் கையளிக்கப்பட்டன



## வாழ்வாதார உதவி

- மூதூர் நிருபர் -

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்தனன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள திருமால்புரம் கிராமத்தில் உள்ள பெண்தலைமை தாங்கும் குடும்பங்களுகளான 06 குடும்பங்களுக்கு வாழ்வாதார அபிவிருத்திக்காக ஆடுகளை கையளிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிறன்று இடம்பெற்றது.



இதன்போது கௌரவ உறுப்பினர் ஜெ.ஜெனார்தனன் அவர்களுடன் விழுது நிறுவன உத்தியோகத்தர் வ.ராஜ்குமார் மற்றும் பெரியகுளம் கிராம சேவகர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரை படங்களில் காணலாம்.



## கவிதைப் போட்டி பரிசளிப்பு விழா

அச்சுதன்

நீங்களும் எழுதலாம் சஞ்சிகையின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை திருகோணமலை இந்துக் கல்லூரியில் நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக சிரேஷ்ட சட்டத்தரணி தி.திருச்செந்தில்நாதன், திருகோணமலை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத் தலைவர் வ.கலைச்செல்வன், இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.பத்மசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்கள் பாடசாலை ரீதியாக நடைபெற்ற கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற திருகோணமலை, கிண்ணியா, மூதூர், நிலாவெளி ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிப் பாராட்டினார்கள்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட சட்டத்தரணி தி.திருச்செந்தில்நாதன் உரையாற்றுகையில், பாடசாலை மட்டத்தில் ஒரு ,மாணவன் இருக்கும்போதே தனது எதிர்காலத்தைப் பற்றிய இலட்சியம் உருவாக்கப்படுகின்றது. இன்றைய பெரியார்கள் தாங்கள் சிறு பிள்ளைகளாக இருந்தபோது தங்களை இனம்காட்டிய கல்விசார் நிகழ்வுகளே தமது இன்றைய நிலையின் மிளிர்ச்சிக்குக் காரணம்

இந்த வகையில் மாணவர்களில் ஆழப்புதைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டம் களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

மாணவர்கள் கவித்துவத்துக்கான ஆற்றல் கிராமம், நகரம் என்ற பேதங்களைக் கடந்து வாழ்க்கையின் உயர் இலட்சியங்களை அடைவதற்கு வழிப்படுத்தப்பட வேண்டும். இந்நிகழ்வில் திருகோணமலை வர்த்தக சம்மேளனத் தலைவர் வ.கலைச்செல்வன், இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.பத்மசீலன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 08

01. பப்பாசி இலையின் வடிவத்தை ஒத்த இலைகள்?
    1. மரவள்ளி 2. ஈரப்பிலா 3. வெண்டி 4. ஆமணக்கு

02. இலைகளை கொண்டிராத தாவரம் எது?
    1. சதுரக்கள்ளி 2. மணிவாழை 3. திருவாச்சி

03. நள்ளிரவில் பூக்கும் தாவரம் எது?
    1. தாழை 2. மல்லிகை 3. ஓர்கிட்

04. தினமும் காய், பழங்களை பெற வீட்டுத் தோட்டத்தில் பயிரிடப்படும் தாவரம் எது?
    1. மா 2. பலா 3. வாழை

05. சமையலறைகளில் இரவில் கறைப்பான் பூச்சிகளின் நடமாட்டத்தை தடுக்கும் எளிய வகை எது?
    1. கையால் பிடித்து அழித்தல்
    2. புச்சி மருந்து விசிறல்
    3. மின்குமிழை ஒளிரவிடல்
    4. பொறி உணவை வைத்தல்

06. மலை நாட்டுப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு பெரும் பிரச்சினையாக உள்ள பிராணி எது?
    1. நத்தை 2. அட்டை 3. யானை

07. கிராமப்புற மக்கள் பற்களைத் துலக்குவதற்கு பயன்படுத்தப்படும் பொருள் எது?
    1. சுட்ட உமி 2. மரக்கரி
    3. ஆளம் குச்சி 4. மேற்கூறிய யாவும்

08. சைக்கிளின் பின்புற சேரு தடுப்பானில் சிவப்பு நிற ஒளித்தெறியி பொருத்தப்பட்டிருப்பதன் காரணம் யாது?
    1. இரவில் நடந்து செல்பவர்களின் பாதுகாப்பிற்காக
    2. இரவில் பாதைக்கு குறுக்காக செல்பவர்களின் பாதுகாப்பிற்காக
    3. இரவில் கடந்து செல்லும் பாதசாரிகளுக்குத் தெரிய வேண்டுமாதலால்
    4. இரவில் பின்புறம் வரும் வாகனங்களுக்கு தெரிய வேண்டுமாதலால்.

09. தரைப் போக்குவரத்துக்கு உதவும் வாகனம் எது?
    1. புகையிரதம் 2. தோனி
    3. விமானம் 4. பாய்மரக்கப்பல்

10. தேசப்படத்திலே நதிகளின் நிறத்தைக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நியம நிறம் எது?
    1. நீலம் 2. ஊதா 3. பச்சை

11. நிலைபேறான காந்தங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் எது?
    1. மின்மணி 2. மின் பாரந்தூக்கி
    3. ஒலிபெருக்கி 4. செவிப்பன்னி

12. பயிர்களுக்கிடையே காணப்படும் பூச்சி பீடைகளை கட்டுப்படுத்த உதவும் பிராணி எது?
    1. லேடி பேர்ட் 2. அந்துப்பூச்சி
    3. வெட்டுக்கிளி 4. நத்தை

13. தண்டுத்துண்டம் மூலம் இனவிருத்தி செய்யும் தாவரம் எது?
    1. ரோசா 2. இஞ்சி 3. வாழை 4. அன்னாசி

14. இலங்கையில் அதிகளவு ஆதிவாசிகள் வாழ்ந்தமையால் அப்பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட பெயர் என்ன?
    1. முலிந்த 2. ஊவா 3. சபர 4. நாதஸ்வரம்

15. சந்தையில் போமலின் இடப்பட்ட மீனை இலகுவாக கண்டறியும் விதம்
    1. மீனிலிருந்து போமலின் மணம் வெளிவரும்
    2. மீனிலிருந்து துர்நாற்றம் வெளிவரும்
    3. மீனின் பூவிழைகள் வெளிறிக் காணப்படும்
    4. மீன் குவியலில் எந்தவொரு வீட்டு ஈயும் மொய்க்காது

**சென்ற வார விடைகள்**

01. 1
02. 2
03. 2
04. 3
05. 1
06. 3
07. 2
08. 3
09. 1
10. 3
11. 2
12. 3
13. 3
14. 2
15. 3

# குறுக்கெழுத்து புதிர் 037

முடிவுத் திகதி : 04.12.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 18 | ல் | 19 | | ■ | 2 | | ■ |
| 3 | | 20 | | | ■ | | 4 சே | |
| ■ | 5 | | | | ■ | 6 | | |
| 7 | | | | ■ | 8 | | | ■ |
| 9 | | கா | 10 | | 21 தி | 11 | | |
| 12 | | | னு | ■ | | | ■ | ■ |
| | ■ | ■ | 13 | ப | 14 | | | 22 |
| து | ■ | ■ | 15 | | | | ■ | க |
| 16 | | து | | | | 17 | | |

## இடமிருந்து வலமாக

1. ஒழுங்கை நிலைநாட்டும் காக்கியுடை
2. திட்டமிட்டு ஒருவருக்கு எதிராகச் செய்வது
3. பெண்களின் சால்வை
4. படைகளின் கூட்டு
5. மனிதனின் பின் அவயம்
6. காவல் செய்து கொள்வது
7. பெண்களின் தங்க நகை
8. இவர் எய்யும் அம்பால் காதல் வரும்
9. லிங்கா படத்தின் உரிமையையும் இந்நிறுவனம் கோருகின்றதாம்.
10. மறுபிறப்பற்ற வாழ்வு
11. வாழையின் நடுப்பகுதி
12. இதனை முறித்தார் இராமன்
13. இலங்கையின் சுதந்திர இலக்கிய பரிசொன்று
14. மனம் சலித்துப் போதல்
15. மூத்த சகோதரன் - குழம்பியுள்ளது
16. ஆன்மாவும் இறைவனும் இரண்டல்ல என்ற கொள்கை
17. நட்சத்திரமொன்று

## மேலிருந்து கீழாக

1. கேட்கத் தேவையான அங்கம்
2. கவலையீனம் - குழம்பிய்ள்ளது
4. சோழன், பாண்டியனைப் போன்றவன்
7. கடலில் எழுவது
8. முஸ்லிம்களின் நீதிபதி
12. சித்தர்கள் செய்வது
18. குழப்படி செய்யும் வாலிபனை இப்படி அழைக்கலாம்
19. எல்லாளனை வென்ற மன்னன்
20. கால்நடைகளை அடைக்கும் இடம்
21. திரைகடல் இதற்காகத்தான் ஓடுகின்றோம்
22. நாளொன்றைக் குறிக்கும் இலக்கம்

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 036 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 அ | ■ | 1 அ | ச | கா | ய | 14 சு | ர | ன் |
| 2 ந் | 15 அ | தி | ■ | ■ | ■ | 3 வ | த | ம் |
| 4 தா | வ | ர | ப | ட் | ச | ணி | ம் | ■ |
| ட் | 5 தா | ன் | 18 தோ | ன் | றி | ■ | 6 ம | டு |
| 7 டி | ர | ம் | ■ | ■ | ■ | 8 ப | த | ம் |
| க் | பு | ■ | ■ | ■ | 16 சி | ல | ந் | 17 தி |
| 9 க | ரு | ட | ன் | ■ | ல | க | ம் | 19 க |
| ட் | 10 ச | ட | ம் | ■ | ம் | ணி | ■ | ட |
| 11 சி | ன் | ன | வ | ன் | 12 பு | டை | ய | ன் |

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:**
*செல்வி. ஆர். தனுசியா,*
*இல10ஏ. நிலாவெளி, திருகோணமலை.*

# சிறுவர் முரசு



**சிந்திக்க .. ..**

நண்பன் எதிரியானால்
நிம்மதி இருக்காது :
ஆனால் எதிரியோ நண்பனானால்
உண்மை இருக்காது!!!

## முள்ளுக்கும் திறமையுண்டு

**குட்டிக்கதை**



விவசாயி ஒருவருக்கு மலை அருகே தோட்டமிருந்தது. அதில் துளசி பயிர் செய்து இருந்தார். துளசி செடிகளுக்கு இடையே முளைக்கும் களைகள், முட்செடிகள் ஆகியவற்றை பிடுங்கி எடுத்து துளசி செடிகைள கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வளர்த்து வந்தார்.

ஒரு நாள் துளசி செடிக்கு இடையே வள்ர்ந்து இருந்த ஒரு முட்செடி செடி ஒன்றை பிடுங்கி எறிந்தார். உடனே அந்த முட்செடி கண்ணீர் விட்டு அழுதது. விவசாயி அந்த முட்செடியிடம் சென்ற போது அது சொன்னது "நான் தான் யாருக்குமே பயன்பட போவதில்லையே. எந்த திறமையும் இல்லாத என்னை ஏன் கடவுள் படைத்தார்." என வருத்தப்பட்டது.

"கடவுள் யாரையும் காரணம் இல்லாமல் படைப்பதில்லை. எல்லோருக்கும் திறமையையும், பலத்தையும் கொடுத்து இருக்கிறார். அதை நாம் தான் கண்டுபிடித்து பயன்படுத்த வேண்டும்" என்று விவாசயி சொல்ல..

"என்ன திறமை இருக்க போகிறது எங்கிட்ட, நானோ முட்செடி பிறரை காயபடுத்துவேனே தவிர, வேறு யாருக்கும் உதவியாக இருக்க மாட்டேன்" என்று தன்னை இழிவாக பேசியது.

மறுநாள் விவசாயி தன் தோட்டத்திலிருந்தது பிடுங்கி எறிந்த முட்செடிகளை எல்லாம் ஒன்று சேர்த்து தோட்டத்தை சுற்றி வேலி அமைத்தார். பின்பு அந்த முட்செடியிடம் சென்று, "நீ முட்செடி தான் பிறறை காயப்படுத்துபவன் தான். ஆனால் உன்னிடமும் திறமை இருக்கிறது பலமும் இருக்கிறது. அதனால் தான் இன்று இந்த தோட்டைத்தையே பாதுகாக்கும் காவல்கார வேலியாக உயர்ந்துவிட்டாய்" என்று விவசாயி சொல்ல. கடவுள் படைத்த எல்லா உயிர்களுக்குமே திறமையும், பலமும் உண்டு என்பதை உணர்ந்தது முட்செடி .

**- இயற்கையின் படைப்பில் எதுவும் தேவையற்றதாகாது -**

## மறுத்திடாதடா!

மட்டிக்கழியடா - தம்பி
மறந்திடாதடா!
கொட்டிக் கிடக்கா - ஊரிக்
குவியலாமடா!


கச்சான் காற்றடா - தம்பி
கடுமைதானடா!
இச்சாலை யிலடா - பெரிய
இரைச்சலாமடா!

மீன்பட கான்டா - தம்பி
மிதந்திடு மான்டா!
கான்கள் உண்டடா - மழைநீர்
கலங்கிப் போமடா!

மாடி வீடடா - தம்பி
மகிழ்ச்சி தானடா!
ஓடிடா தடா - மெ.்.தவாய்
உலவி வாவடா!

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு. கிண்ணியா)

## எத்தனை பந்துகள் இதில் காணப்படுகின்றன?





செல்வி. ஏ. பாத்திமா நஜா
தரம் 07, இக்பால் நகர்.




ஆர். நிதுஷாந்தினி
சங்கோசபுரம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 250g பருப்பின் விலை ரூபா 25 எனின், 2 kg பருப்பின் விலை யாது ?
02. 1.05 லீற்றரை, ml ல் தருக.
03. வரிப்படத்தில் கோணம் AOC யின் பருமன் யாது ?




04. $-4x=20$ எனின், x ன் பெறுமானம் யாது ?
05. 1m : 40cm ஐ எளிய வடிவில் தருக.
06. ஒரு தொகைப் பணத்தின் 1/3 பங்கு ரூபா300 எனின், முழுத்தொகை எவ்வளவு?
07. ஒரு சதுரக்கூம்பகத்தில் அடி விளிம்பின் நீளம் 10cm ஆகவும் முழு மேற்பரப்பளவு $340cm^2$ ஆகவும் இருப்பின், முக்கோண முகம் ஒன்றின் பரப்பளவு யாது ?
08. அகிலத்தொடை = { 1, 2, 3, 4, 5, 6 } ஆகவும் A = { 2, 3, 5 } ஆகவும் இருப்பின், n(A') ஐக் காண்க.
09. பெறுமானம் காண்க. $\lg 4+\lg 25$
10. சதுரமுகித் தாயக்கட்டையினது முழு மேற்பரப்பளவு 24 $cm^2$ எனின், ஒரு முகத்தின் பரப்பளவு யாது ?
11. சுருக்குக.
12. 8 மனிதர்கள் 15 நாட்களில் செய்யும் வேலையை 12 நாட்களில் செய்து முடிப்பதற்கு எத்தனை
மனிதர் தேவை எனக் காண்க.
13. ரூபா 500 பெறுமதியான மணிக்கூடு ஒன்றை 15% இலாபம் பெற என்ன விலைக்கு விற்க வேண்டும்?
14. $5^{x+1}=125$ எனின், x ஐக் காண்க.
15. தீர்க்க. $2\lg x=4\lg 2$
16. பெறுமானம் காண்க. 2.4532 / 3
17. $\lg 2=0.3010$, $\lg 3=0.4771$ எனின், $\lg 0.6$ ன் பெறுமானத்தைக் காண்க.
18. r = 7 cm, h = 12 cm எனின், உருளையின் வளைந்த மேற்பரப்பளவைக் காண்க.
19. ஒரு திண்ம அரைக் கோளத்தின் மேற்பரப்பளவு $462cm^2$ எனின், அதன்ஆரையைக் காண்க.
20. ஒரு கூட்டல் விருத்தியின் n ஆம் உறுப்பு $7n-2$ எனின், பொது வித்தியாசத்தையும், n+1 ஆம் உறுப்பையும் காண்க.

01. ஜெனி ரூ95000 ஐ எளிய வட்டிப்படி 15வீதம் ஆண்டு வட்டி வழங்கும் வங்கியொன்றில் சேமிப்பில் இடுகிறார்.
1. 2 வருடத்தின் பின்னர் ஜெனியின் கணக்கில் வட்டியாக சேர்ந்திருக்கும் பணத் தொகை யாது?
2. அவர் 6 மாதத்திற்கு ஒரு முறை வட்டியை அவர் கணக்கிலிருந்து எடுப்பார் எனின், எவ்வளவு தொகையை எடுத்திருப்பார்?
3. ஜெனி இதே வீதத்தில் 2 ஆண்டுக்கு கூட்டு வட்டியில் வைப்புச் செய்தால் எவ்வளவு பணம் கூடுதலாக சேர்க்கலாம்?
4. ரூP ஐ 15வீத எளிய வட்டி படி 2 வருடம் சேமிப்பில் இட்டால் கிடைக்கும் மொத்தத் தொகை 13P/10 எனக் காட்டுக.
5. மேலே உள்ள சமன்பாட்டில் பிரதியிடுவதன் மூலம் ரூ65000 ஐ வைப்பிலிட்டால் கிடைக்கும் தொகையைக் காண்க.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. 1. உராய்வு விசை என்றால் என்ன?
2. உராய்வு விசையின் எல்லைப் பெறுமானத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் இரண்டு தருக.
3. உராய்வு விசையை எவ்வாறு குறைக்கலாம்?
4. நியூற்றனின் முதலாவது விதியைத் தருக.
5. உந்தம் என்றால் என்ன?
6. 10Kg திணிவின் மீது 12N விசை பிரயோகிக்கப்பட்டால் அதனால் ஏற்படும் ஆர்முடுகல் என்ன?
7. அன்றாட ஆர்முடுகலுடன் நடைபெறும் இயக்கத்திற்கு இரண்டு உதாரணங்கள் தருக.
8. அன்றாட அமர்முடுகலுடன் நடைபெறும் இயக்கத்திற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

02. காச நோய் காரணி பற்றீரியாவான பசிலிஸ் ரியூபளோசிஸ் என்ற நுண்ணங்கி யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
1. வில்லியம் கார்வே 2. ரொபர்ட் கொக்
3. அலெர்சாண்டர் பிளமிங் 4. கிரகர் மென்டல்

03. சுவாசப்பை சிற்றறைகளில் வாயுப்பரிமாற்றம் நிகழ போதிய சுவாசம் கிடைப்பதற்கு குருதிகலங்கள் எவ்வாறு சிறப்படைந்துள்ளது?
1. செங்குழியங்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டது.
2. வெண்குழியங்களின் எண்ணிக்கை அததிகமாக காணப்பட்டது
3. செங்குழியங்களின் விட்டம் குருதி மயிர்த்துளைக்குழாயின் விட்டத்திலும் அதிகமாக காணப்பட்டது.
4. செங்குருதி கலங்கள் மயிர்துளை குழாயிகளினூடாக விரைவாக செல்லக் கூடியதாக இருந்தது.

04. ஐதரசன் மூலகத்தின் மிகவும் அதிக அளவில் உள்ள சமதானி யாது?
1. ${}^{1}_{1}H$ 2. ${}^{2}_{1}H$ 3. ${}^{3}_{1}H$ 4. ${}^{4}_{1}H$

05. கழிவுப் பொருள்கள் என்பன உடலின் உயிரசாயனச் செயன்முறைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தேவையற்ற பொருள்களாகும். இதற்கேற்ப மனிதனின் உடலிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருளாக அமையாதது?
1. தோலிலிருந்து வெளியேறும் வியர்வை.
2. சிறுநீரகங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் சிறுநீர்
3. சுவாசத் தொகுதியிலிருந்து வெளியேற்றப்படும் நீர்
4. உணவுக் கால்வாயிலிருந்து வெளியேற்றப்படும் மலம்.

06. மேற்பரப்பைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்கள் பல நிறங்களைக் கொண்டு காணப்படுகின்றன. இந்நிறங்களுக்குக் காரணமான பல நிறப் பொருட்கள் காணப்படுகின்றன. மஞ்சள் நிறத்திற்குக் காரணமான நிறப் பொருள் எது?
1. தைத்தேனியம் ஒட்சைட்டு 2. ஈயகுரோமேற்று
3. குரோமியம் ஒட்சைட்டு 4. காபன்

07. 1955 ஆம் ஆண்டில் வில்பத்து சரணாலயத்தில் வாழ்ந்த மான்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 550 எனின், அம்மான்களின் கூட்டத்திற்கு வழங்கும் மிகப் பொருத்தமான பெயர் எது?
1. இனம் 2. சூழல் தொகுதி 3. சாகியம் 4. குடித்தொகை

08. ஒளியின் மூன்று அடிப்படை நிறங்களாக கருதப்படுவன யாவை?
1. சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகியன 2. சிவப்பு, பச்சை, நீலம் ஆகியன
3. சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகியன 4. நீலம், பச்சை, மஞ்சள் ஆகியன

09. நீர், காற்று, விலங்குகள் ஆகியவற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் முறையே
1. வாதுமை, முருங்கை, மரமுந்திரிகை 2. அல்லி, ஆடையொட்டி, பருத்தி
3. தென்னை, இறப்பர், மா மரம் 4. எருக்கலை, ஒகிட், ஒட்டுப்புல்

## பாடம் : வரலாறு

01. சர்வதேச நீதிமன்றம் அமையப் பெற்ற நாடு
1. அமெரிக்கா 2. பிரான்ஸ்
3. ஜேர்மனி 4. நெதர்லாந்து

02. ஆலண்ட தீவு தொடர்பாக முரண்பட்ட நாடுகள்
1. ஈராக் - குவைத் 2. கிரீஸ் - பல்கேரியா
3. சுவீடன் - நோர்வே 4. சுவீடன் - பின்லாந்து

03. உணவு, நிலம், சமாதானம் என்ற வாசகம் அடங்கிய புரட்சி
1. பிரான்ஸிய புரட்சி 2. ரஷ்யபுரட்சி
3. ஆங்கில புரட்சி 4. அமெரிக்க சுதந்திர போராட்டம்

04. பின்வரும் சோடிகளில் பொருத்தம் அற்றது
1. அநகாரிக தர்மபால – மகாபோதிச்சங்கம்
2. D.P ஜயதிலக – பௌத்த இளைஞர்சங்கம்
3. ஒல்கொட் - பரமவிஞ்ஞானார்த சங்கம்
4. E.W பெரேரா – பௌத்த இளைஞர் சங்கம்

05. நாஸிச வாதத்தின் கொள்கை அல்லாதது
1. எதிரிகளை அழித்தல்
2. இரகசிய இராணுவ மூலம் தகவல் திரட்டல்
3. மக்களின் நலனையே கருத்தில் கொள்ளல்
4. பொருளாதாரத்தை அரசின் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்

06. மகதத்தின் தலைநகரான ராஜகிருகத்தை கைவிட்டு பாடலிபுரத்தை தெரிவு செய்த மன்னன்
1. பிம்பிசாரன் 2. அஜாசத்துரு
3. அசோகன் 4. சமுத்திரகுப்தன்

07. அஜந்தா குகை ஓவியம் சிறப்பு பெற்ற காலம்
1. மௌரியர் 2. குப்தர் 3. குஷாணர் 4. நந்தர்

பகுதி 02.

01. 1. அ. இலங்கையில் சட்டவாக்கக் கழகத்திற்கு தெரிவான முதல் கல்வி கற்ற இலங்கையர்

ஆ. 1818 ஆம் கிளர்ச்சியின் போது பிரித்தானியாருக்கு சார்பாக நடந்து கொண்ட பிரதானி

இ. 1948 ஆம் ஆண்டு சுகந்திர இலங்கையின் முதல் பிரதமர்

1.மேற்படி விடயங்களை தொடர்புடையவர்களை அ, ஆ, இ என்ற ஒழுங்கில் தருக.

2. இலங்கையின் கோப்பிசெய்கை விருந்திக்கு பங்களித்த காரணிகள் இரண்டை தருக?

3. 1948 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு கோல்புறூக் கமரன் சீர்திருந்தம் காரணமான விதத்தை இரு காரணிகள் ஊடாக விளக்குக.

4. பெருந்தோட்டத் துறையினால் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களை சுருக்கமாக விளக்குக.

02. பின்வருவனவற்றுள் சேர்.பொன்.இராமநாதனின் சேவை தொடர்பான கூற்றுளது?
1. வண்ணார்பண்ணையில் ஆங்கிலப்பாடசாலை ஒன்று ஆரம்பித்தமை
2. பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தமை.
3. சைவபரிபாலன சபையினை ஆரம்பித்தமை
4. பரமேஸ்வராக் கல்லூரியைக் கட்டுவித்தமை

**ஆசிரியர் : அகிலன்**

## Grammar

Ex 01: Use your own ideas to complete these sentences. Use the past continuous.
1. The television was on but nobody ............................
2. Tom burnt his hand while he ............................
3. The door bell rang while I ............................
4. Marry fell asleep while she ............................
5. We saw an accident while we ............................
6. I saw Sue in town yesterday but she ............................
7. I was having dinner with ............................
8. Ann was watching television when the ............................
9. When Yakshayan arrived We ............................
10. I waved to her but she ............................

Ex 02: A friend has just come back from holiday. You ask him about it.
1. (Where/ go) ............................
2. (go/ alone) ............................
3. (food/ good) ............................
4. (how long/ stay there) ............................
5. (stay/ at a hotel) ............................
6. (how/ travel) ............................
7. (the weather/ fine) ............................
8. (what/ do in the evenings) ............................
9. (meet anybody interesting) ............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாருக்கு ஆதரவு...

நியாயமான தேர்தலுக்காக பொதுக்கூட்டமைப்புடன் தமிழ்க் கூட்டமைப்பு இணைந்து செயற்படும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரடியாக பொதுவேட்பாளருக்கு ஆதரவளிக்காது. எனினும் தமிழ்க் கூட்டமைப்பு இருந்தாலோ இல்லாவிட்டாலோ பெரும்பான்மை தமிழர்கள் எதிர்க்கட்சி வேட்பாளருக்கே வாக்களிப்பர் என்று அவர் ஆங்கில இணையத்தளம் ஒன்றுக்கு தெரிவித்திருந்தார்

எனினும் இப்பேட்டி தொடர்பாகக் கடும் அதிருப்தி சுரேஸிற்கு எதிராக எழுந்துள்ள நிலையில் அவர் அரசின் உளவாளியகச் செயற்படுகின்றார் என்றோர் தகவலையும் சர்வதேசத் தமிழ் ஊடகமொன்று வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது எதிர்வரும் 8ம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாகத் தனது கருத்தை வெளியிடவுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வெள்ளத்தில்...

வருகின்றன.

திருகோணமலையில் சேனையூர் கட்டைப்பறிச்சான் பிரதேுசத்தினுள் புகுந்துள்ள வெள்ளம் காரணமாக சேனையூர் மத்திய கல்லூரியின் நிலப் பிரதேசம் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கத் தொடங்கியுள்ளது.

க.பொ.த. காதாரண தரப் பரீட்சைகள் நடைபெறும் நிலையங்களுள் ஒன்றான இப்பாடசாலையில் வெள்ளம் புகுந்துள்ளது.

கடந்த 28ம் திகதி பிரதேசச் செயலாளர் மற்றும் காவல்துறையின் ஒத்துழைப்புடன் வெள்ளத்தை வேறு திசைகளுக்குக் கடத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் பெக்கோ இயந்திரத்தின் தட்டுப்பாட்டால் அந் நடவடிக்கை முழு அளவில் செயற்படுத்தப்பட முடியா- திருப்பதாக கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

மூதூர் பிரதேசசபையிடம் உள்ள ஒரேயொரு பெக்கோ இயந்திரத்தைக் கொண்டு பல கிராமங்களுக்கும் வாய்க்கால்கள் வெட்டும் பணி நடந்துவருவதால் இந் நிலை எழுந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

## காணி உறுதிப்பத்திர.....

திகதி நிகழ்ந்ததாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 27ம் திகதி மாவட்டச் செயலாளரின் அலுவலகத்திற்கு காலை 9 மணிக்கு அழைக்கப்பட்டிருந்த மக்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்க வேண்டுமாயின் சமர்ப்பிக்க வேண்டிய இரண்டு ஆவணங்களைச் சமர்பிக்குமாறு கோரிய கடிதங்களை வழங்கி 11.30 திருப்பியனுப்பியதாகத் தெரிகின்றது.

பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளரால் கையொப்பமிடப்பட்டுள்ள இக் கடிதத்தில் விண்ணப்பப்படிவம் -2 சத்தியக் கடதாசி 2 ஆகிய ஆவணங்களைச் சமர்ப்பிக்காவிட்டால் அவற்றைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இக்கடிதத்தைத் தபாலிட முடியும் எனத் தெரிவித்த மக்கள் இதனை கிராம சேவையாளரூடாகக் கூட அனுப்பியிருக்க முடியும் எனவும் தெரிவித்தனர்.

இக் கூட்டத்தில் பொருளாதாரப் பிரதி அமைச்சர் புஞ்சிநிலமே, கிழக்கின் தவிசாளர் ஆரியவதி, மாவட்டச் செயலாளர் மற்றும் பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளர் உட்பட அதிகாரிகள் கலந்திருந்தனர்.

வேலைவாய்ப்பு
**கணனி வரைகலைஞர் (டிசைனர்)**
மலைமுரசு பத்திரிகையினை வடிவமைக்கவும்
அச்சுக் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளவும் வரைகலை நிபுணர்
தேவை....
**நல்ல சம்பளம் வழங்கப்படும்**
0777 555 738

## கணித பாட வினா....

அத்துடன் புள்ளி வழங்கும் திட்டத்திலும் பிழைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே நாடளாவிய ரீதியில் கணிதபாடப் பெறுபேறுகளில் குறைவு அவதானிக்கப்பட்டுள்ள நிலையில் இறுதிப் பரீட்சைக்கு ஒப்பான இப்பரீட்சையில் கணக்கற்ற பிழைகள் கண்டு பிடிக்கப்பட்டமை குறித்த பரீட்சை தொடர்பான தரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

வினா இலக்கங்களில் அரேபிய இலக்கம் தவிர்க்கப்பட்டு ரோம இலக்கங்கள் புகுத்தப்பட்டுள்ளமை, மட என்னும் சொற்களின் கீழ் அடி எண்ணான 10 இடப்படாமை, கேத்திர கணிதக் கேள்வியின் படம் பிழையாக வரையப்பட்டுள்ளமை, கேள்விகளைப் பிழையாக அமைத்துள்ளமை, புள்ளி வழங்கு திட்டத்தில் சில கேள்விகளுக்குப் புள்ளிகளை வழங்காமையென தவறுகள் நீண்டு செல்கின்றன.

இவ்விடயம் தொடர்பாக என்ன நடைபெற்றது என்பதை அறிந்து கொள்வதற்காக உரிய பாட ஆலொகசரைத் (ஐ.எஸ்.ஏ) உடன் தொடர்பு கொண்ட போது கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்து தொலைபேசி அழைப்பைத் துண்டித்ததுடன் பாடத்திற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர் கைத்தொலைபேசி அழைப்பிற்கு பதிலளிக்காமல் இருந்ததுடன் அலுவலகத் தொலைபேசியூடாகவும் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து இவ்விடயத்தை மலைமுரசின் மக்கள் குறைகேள் அலுவலகம் கல்வி அமைச்சின் செயலாளருக்கும், கிழக்கின் கல்விப் பணிப்பாளரது கவனத்திற்கும் கொண்டுவரும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

## திட்டமிட்ட வகையில்..

தற்போது இந்த மூன்று முகாம்களில் உள்ள மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து மற்றோரிடத்திற்கு நகர்த்தும் முயற்சிகளே முன்னெடுக்கப்பட்டுள்ளனவாம்.

சம்பூர் காளி கோவிலுக்கு அருகில் பெரும் நிலப்பரப்பொன்று துப்புரவாக்கப்பட்டுவருவதால் அங்கு இம்முகாம்கள் நகர்த்தப்படுமா என்றோர் சந்தேகமும்

## இடைத்தங்கல்...

சுகாதாரச் சீர்கேடுகளுக்கு உள்ளாகின்றனர். ஆகவே இந்தப் பிரச்சனைகளை உடனடியாக கவனித்து முகாம்களையும், சூழலையும் சுத்தமாகப் பேணுவதற்கு உரிய நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. சி. தண்டாயுதபாணி இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 26.11.2014 செவ்வாய்கிழமை திருகோணமலை மாவட்டசெயலகத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட த.தே.கூ. மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர், திரு.சி.தண்டாயுதபாணி மற்றும் உறுப்பினர்கள் திரு. கு. நாகேஸ்வரன், திரு.ஜெ. ஜெனார்த்தனன் ஆகியோர் சம்பூர் அகதிகள் இம்மழை காலத்தில் அனுபவிக்கும் துன்பங்களை எடுத்துக் கூறினர்.

இதற்கு பதிலளித்த, மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான புஞ்சிநிலமே அவர்கள், இந்தப் பிரச்சனை ஒவ்வொரு வருடமும் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. இந்த மக்களுக்கு வேறு மாற்றிடங்களை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் முயற்சிக்கும் போது அது பலனளிப்பதில்லை. ஆகவே த.தே.கூ. உறுப்பினர்கள் இதற்கு உதவி செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்.

இதற்கு திரு.சி.தண்டாயுதபாணி, திரு. நாகேஸ்வரன் பதிலளிக்கும் போது, தமது வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு இப்போது அகதி முகாம்களில் தங்கியுள்ள சம்பூர் அகதிகளை அவர்களது சொந்தக் காணிகளுக்குச் செல்வதற்கு அரசாங்கம் அனுமதித்தால் அது மக்களுக்கு நன்மையளிப்பதாக இருக்கம். தமது சொந்தக் காணிகளில் தமது வாழ்வாதாரத்தை தேடிக் கொள்ளவும் அவர்களுக்கு முடியும்.

அனல் மின் நிலையத்திற்கும், கைத்தொழில் அபிவிருத்தி வலயத்திற்கும் தேவைப்பட்ட காணிகள் சம்பூரில்

## அவுஸ்திரேலியா....

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக படகு மூலம் பயணித்து கொண்டிருந்த போது, அந்நாட்டு கரையோர பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கையர் படகுடன் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இந்தோனேசியாவுக்கு அருகில் உள்ள கடற்பரப்பில் வைத்து அவுஸ்திரேலிய கரையோர பாதுகாப்பு படையினர் இந்த படகை கைது செய்தனர்.

படகில் இருந்த 37 பேர் தற்போது இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 6 சிறார்கள் அடங்குவதாக காவல்துறை தெரிவித்தனர்.

விசாரணைகளில் இவர்கள், மாரவில, சிலாபம் மற்றும் கொழும்பு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது எனவும் அச் செய்தி தொடர்கின்றது.

## படையினரின்....

மேற்கொண்டுள்ளார்.

நிலஅளவை ஆணையாளர் நாயகத்தின் படவரைபின் படி பட இலக்கம் டோபோ பிபி 37ன் படி கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளிப் பிரதேசத்தின் கோபாலபுரம் கிராமத்திலுள்ள காணிகளில் தேர்ந்தெடுக்கப் பட்டவையே இவ்வாறு கையகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பிரதேசச் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் அடுத்துவரும் 14 நாட்களுக்குள் உரிய காணி உரிமையாளர்கள் தமது உரிமையை நிலைநாட்டும் முகமாக பிரதேசச் செயலாளருக்கு எழுத்தாலான முறைப்பாட்டை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தேவையேற்படின் காணி உரிமையாளர்கள் நீதிமன்ற உதவியையும் நாடலாம் எனவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இம்முயற்சிகள் எவையும் எடுக்கப்படாவிடில் தனது முடிவே இறுதியானது என அவரது அறிவித்தல் வெளியாகியுள்ளது.

காணி அனுமதிப்பத்திரமுள்ள உரிமையாளர்கள் எவரும் தமது காணிகளை மீட்க முயற்சிக்கலாம் எனத் தெரியவந்துள்ளதை அடுத்து தேவையானவர்கள் அதற்கான சட்ட தேவைகளை இலவலசமாக நிறைவேற்றிக்கொள்ள மலைமுரசின் மக்கள் குறைகேள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு

## தனி மாவட்டத்திற்கு...

இதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள், இன நல்லுறவில் ஏற்படப்போகும் விரிசல் தொடர்பாகவும் கூறி வழமை போன்று தமிழ் பிரதிநிதித்துவம் பேணப்பட வேண்டும் என சபையில் எடுத்துரைத்த போது முதல்வர் அவர்களால் பின்வருமாறு பதில் அளிக்கப்பட்டது.

"எங்களால் கொண்டு வரப்பட்ட கரையோர மாவட்ட பிரேரனைக்கு தமிழ் பிரதிநிதிகள் எதிர்த்து வாக்களித்ததற்கான நடவடிக்கைதான் இது எனவும் எதிர்காலத்தில் இது தொடர்பாக ஏனைய கட்சித்தலைவர்களுடன் பேசி முடிவெடுக்கலாம்" எனவும் கூறி ஏனைய சில அறிவித்தலையும் கூறிவிட்டு எங்கள் கருத்துக்களை கூறுவற்கு இடமளியாது, அமர்வினை இடையில் முடித்து விட்டு வெளியேறிய சம்பவமானது. ஒரு ஜனநாயகமற்ற சர்வதிகாரத் தன்மையையும் தமிழர்கள் மீதுள்ள அடக்கு முறையையும் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது என இவர்கள் தெரிவித்தனர்.

அரசினால் இனங்காணப்பட்டுள்ளன. அபிவிருத்திக்காக இந்தக் காணிகள் தேவைப்படின் அதற்கு நாம் தடையாக இருக்கவில்லை. அந்தக் காணிகள் போக மிகுதிக் காணிகளையாவது இம்மக்களுக்கு மீளளிக்க வேண்டியது தான் நியாயமும் தர்மமும் ஆகும் அதனைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசரமானதாகும். இந்தச் சூழ்நிலையில் இந்த மக்களை வேறு மாற்றிடங்களுக்கு நகர்த்துவது என்பது தேவையற்றதாகும் எனத் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நம்பிக்கை

## நபித்தோழர்கள் நம்பிக்கை கொண்டது போல் நம்பிக்கை கொள்வதே சிறந்த முறையாகும்

கடந்தவாற தொடர்ச்சி .. ..

யூத, கிறிஸ்தவ சகோதரர்கள் தமது இறைத்தூதர்களைப் போற்றும் அதே வேளை, அடுத்த இறைத்தூதர்களைத் தூற்றுகின்றனர். இது கொள்கை அடிப்படையில் முரண்பாடானதும் குறுகிய பார்வை கொண்டதுமாகும்.

நபித்தோழர்களை ஈமான் கொள்வோம்:

"(நம்பிக்கை கொண்டோரே!) நீங்கள் எவற்றைக் கொண்டு நம்பிக்கை கொண்டீர்களோ, அதே போன்று அவர்களும் நம்பிக்கை கொண்டால், நிச்சயமாக அவர்கள் நேர்வழி பெறுவர். அவர்கள் புறக்கணித்தால், அவர்கள் முரண்பாட்டிலேயே இருப்பர். எனவே, அவர்கள் விடயத்தில் உமக்கு அல்லாஹ்வே போதுமானவன். அவன் (யாவற்றையும்) செவியுறுபவனும் நன்கறிந்தவன்." (2:137) முஸ்லிம்கள் நம்பிக்கை கொண்டது போல் யூத, கிறிஸ்தவர்களும் நம்பிக்கை கொண்டால் அவர்கள் நேர்வழியைப் பெறுவார்கள் என்று இந்த வசனம் கூறுகின்றது.

தொடரும் .. ..

## அல்லாஹ் இறைவன் தானா?



உலகில் வாழும் பல கோடி முஸ்லீம் மக்களால் வணக்கத்துக்குரிய கடவுளாக கொள்ளப்படுபவன் தான் அல்லாஹ். அல்லாஹ் என்பது ஓர் அரபு மொழிச் சொல்லாகும். செமித்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த அரபு, சுர்யானி, உருது, அபராணி போன்ற மொழிகளில் இறைவனைக் குறிப்பதற்கு அலிப், லாம், ஹா ஆகிய மூன்று எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டு வந்தன. எனவே தான் இறைவன் கிட்டத்தட்ட 1400 வருடங்களிற்கு முன்பு தன் அடியார்களுக்கு தன்னை அல்லாஹ் என அச்சமூகத்திற்கு பரீச்சயமான முறையில் அறிமுகம் செய்கின்றான்.

உலகில் வாழும் முஸ்லீம்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்பற்றப்பட்டு வரும் வேத நூலான அல்குர்ஆனில் அல்லாஹ் தன்னை கீழ்வருமாறு அடையாளப் படுத்துகின்றான்.

"அல்லாஹ்" ஆகிய நான் ஒருவனே என்பது அந்த இறைவசனத்தில் முதலாவது வசனம். இங்கு நாம் தமிழ் மொழியில் கடவுள்கள் என பன்மையாக்குவது போன்றும் இறைவன் என்பதற்கு இறைவி என பெண்பாற் சொல் இடுவது போலவும் இந்த அல்லாஹ் என்ற சொல்லுக்கு விளக்கம் கொடுக்க முடியாமையினை அரபு இலக்கணம் படித்தவர்களும், அரபு மொழி தெரிந்தவர்களும் நன்கு அறிவர். இதன் மூலம் அல்லாஹ் என்பது மனிதர்களை வியக்க வைக்கும் இறைவனால் அறிமுகம் செய்யப்பட்ட கூற்றுத்தான் என்பதனை மேலும் உறுதி செய்கின்றது.

**இல்ஹாம்**




## முட்டை பணியாரம்



**தேவையான பொருட்கள்**

முட்டை – 2, ரவை - 150 கிராம், மைதா - 150 கிராம், தேங்காய்ப் பால் - 1 கப், சர்க்கரை - 150 கிராம், சோடா உப்பு - 2 சிட்டிகை, ஏலக்காய் - 4, முந்திரிப்பருப்பு - 20 கிராம்

**செய்முறை**

முட்டைகளை நுரைக்க அடிக்கவும். ரவை, மைதாமாவு, சர்க்கரை, தேங்காய், அடித்த முட்டை, சோடா உப்பு, ஏலத்தூள், பொடியாக நறுக்கிய முந்திரிப் பருப்பு இவைகளை இட்லி மாவு போல் கரைத்து வைக்கவும். பணியாரச் சட்டியில் எண்ணெய் ஊற்றிக் காய வைக்கவும். சிறிய கரண்டியில் மாவை எடுத்து எண்ணெயில் ஊற்றவும். பணியாரம் எழும்பியதும் திருப்பிப் போட்டு வெந்ததும் எண்ணெய் வடிய வைத்து எடுக்கவும்.

## கண்ணுக்கு இலட்சணமா இருக்க



வெள்ளையாக இருக்க வேண்டும் என்று பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் ஆசைப்படுவார்கள். இதில், அதிகமாக ஆசைப்படுபவர்கள் பெண்கள்தான். கருமையாக இருக்கும் சருமத்தை வெள்ளையாக்க நிறைய பொருட்கள் நம் வீட்டு சமையலறையிலேயே உள்ளது.

1. எலுமிச்சையை பாதியாக வெட்டி, அதனை சாறு எடுத்து, அதில் சிறிது தண்ணீர் சேர்த்து கலந்து, பின் அதனை முகம் மற்றும் கழுத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், சருமத்தில் உள்ள கருமையானது நீங்கிவிடும்.
2. எலுமிச்சை சாற்றில் தயிர் சிறிது சேர்த்து கலந்து, முகத்தில் தடவி உலர வைத்து கழுவ வேண்டும். இப்படி வாரம் ஒருமுறை முகத்திற்கு மாஸ்க் போட்டால், நல்ல மாற்றத்தைக் காணலாம்.
3. எலுமிச்சை சாற்றுடன், ஒரு முட்டையின் வெள்ளைக்கருவை சேர்த்து கலந்து முகத்தில் தடவி உலர வைத்து பின் கழுவ வேண்டும். இப்படி 3 நாட்களுக்கு ஒருமுறை மாஸ்க் போட்டால், சருமத்தில் உள்ள கருமை நீங்கி, சருமம் வெள்ளையாவதைக் காணலாம்.
4. ஒரு டீஸ்பூன் எலுமிச்சை சாற்றுடன், 1 டீஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி உலர வைத்து கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால் நல்ல மாற்றத்தைக் காண முடியும்.
5. பாலில் சில துளிகள் எலுமிச்சை சாற்றினை விட்டு நன்கு கலந்து, அந்த கலவையை முகத்தில் மற்றும் கருமையாக உள்ள இடங்களில் தடவி உலர வைத்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்து வந்தால், சரும வெள்ளையாக மாறும்.



6. வெள்ளையான சருமம் வேண்டுமானால், இரவில் படுக்கும் போது எலுமிச்சை சாற்றுடன் மில்க் க்ரீம் சேர்த்து கலந்து, காலையில் எழுந்ததும் முகத்தில் தடவ வேண்டும். இப்படி செய்து வர விரைவில் சருமத்தின் நிறம் அதிகரிப்பதைக் காணலாம்.
7. ஆலிவ் ஆயிலுடன் எலுமிச்சை சாற்றினை சேர்த்து கலந்து, முகத்திற்கு மாஸ்க் போட்டால், சருமத்தின் நிறம் அதிகரிப்பதோடு, தழும்புகளும் மறைந்துவிடும்.




## வாரமொரு ஜோக்

- கீதா -

**பஞ்ச் டயலொக்ஸ்**

- பூவுமேல மனுசன் கிடந்தா பர்ஸ்ட் நைட்டு.
மனுசன்மேல பூவு கிடந்தா லாஸ்ட்டு நைட்டு
- காதலி இருந்து வறுமையில் இருப்பதை விட காதலி இல்லாமல் வெறுமையில் இருப்பது மேல்...
- கராத்தே பெண்களுக்கும்..கேட்ரிங் ஆண்களுக்கும்.. தற்காப்பு கலைகள்.
- ஒரே நேரத்தில் ஒன்பது ரீயாக்ஸன் கொடுப்பது பெண்கள் குணம், ஒன்பதுளையும் ஒண்ணுமே புரியாம தவிப்பது ஆண்கள் மனம்

**ஹா! ஹா! ஹா!**

'ஏன்யா துணி துவைக்கற இடத்துல வந்து பால் இருக்கான்னு கேக்கறியே நியாயமா?"

"தப்பா நினைச்சுக்காதீங்க வெளுத்ததெல்லாம் பால்னு நினைக்கறவன் நான்"

**ஹா! ஹா! ஹா!**

வடிவேலு: சென்னையில் இருந்து மும்பை செல்ல எவ்வளவு நேரம் ஆகும்??

Receptionist : Plz one minute sir...

வடிவேலு: அடங்க் கொக்கமக்கா..என்ன speed...

**ஹா! ஹா! ஹா!**

என்ன தான் வீடு, வாசல்,தோட்டம், பங்களான்னு வசதியா இருந்தாலும் !

Train ஏறனும்னா Platform க்கு வந்துதான் ஆகனும்.!

**ஹா! ஹா! ஹா!**

ஒரு சின்ன பொண்ணு கவனக்குறைவா Road Cross பண்ணிச்சாம்!

Traffic Police : நான் விசில் அடிச்சும், கை காட்டியும் ஏன் பாப்பா கண்டுக்கல?

பொண்ணு : நான் ஒண்ணும் அந்த மாதிரி பொண்ணு இல்ல!




## அதிகம் பாதிப்பு உறுவது பெண்களே



ஆண்களை விட பெண்களுக்கு அதிகமான உடல் பிரச்சனைகள் வரும். குறிப்பிட்ட வயதிற்கு மேல் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டாலும் உடல் உபாதைகள் வந்து விடும்.

**மாதவிலக்கு பிரச்சனைகள்**

ஒவ்வொரு மாதமும் மாதவிலக்கிற்கு முன் வீக்கம், வயிற்றுப் பிடிப்பு, மார்பக வீக்கம், மலச்சிக்கல், மூட்டு மற்றும் தசை வலி, முகப்பரு மற்றும் ஊசலாடும் மன உணர்வுகளால் ஒவ்வொரு பெண்ணும் பாதிக்கப்படுகிறாள்.

**பாலிசிஸ்டிக் கருப்பை நோய்**


இந்நோயால் பாதிக்கப்படும் பெண்களுக்கு மாதவிலக்கில் பிரச்சனை மற்றும் கருமுட்டை முழு வளர்ச்சி அடையாமல் மற்றும் சிறியதாக இருக்கும். இதனால் கருவுறும் வாய்ப்பு மிகவும் குறைவாக இருக்கும்.

**கருப்பை கட்டிகள்**

நார்ப் பொருளால் கட்டியானது கருப்பையில் தோன்றுவதால் அதிகமான உதிரப்போக்கு மற்றும் வலி, கருவுறுதலில் சிக்கலை உண்டாக்கும் இக்கட்டிகள் பொதுவாக இயற்கையாகவே மாதவிலக்கு நின்று விட்ட பெண்களுக்கு சுருங்கி விடும். சில நேரங்களில் அவை சுருங்காமல் மிகுந்த வலியைக் கொடுக்கும். பெரும்பாலான பெண்கள் இவ்வகை நார்த்திசுக்கட்டிகளால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

**மார்பக மற்றும் கர்ப்பபை வாய்ப்புற்றுநோய்**

பெரும்பாலும் பெண்களை அச்சுறுத்தும் நோய் என்று இதைச் சொல்லலாம். உடற்பயிற்சி செய்யாமல் இருப்பது, தாமதமான திருமணம், மோசமான உணவு, அதிகமாக புகையிலை மற்றும் மது அருந்துதல் இவற்றின் மூலம் இந்நோய் அதிகமாக ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. மார்பகத்தில் கட்டியோ அல்லது தோல் தடித்து இருந்தாலோ, மார்பக காம்பிலிருந்து திரவம் போன்ற பொருள் வெளியேறினாலோ கட்டாயம் அவை மார்பக புற்றுநோயின் அறிகுறி என்று சொல்லலாம். பாலியல் தொடர்பு, குழந்தைப்பேறில் இடைவெளி இல்லாமல், சுகாதாரமின்மை இவை அனைத்தும் கர்பப்பை வாய் புற்றுநோய்க்கு காரணங்களாகும்.



## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம் :** எவரிடமும் சமயோசிதமாக பேசி, நன்மை பெறுவீர்கள்.

**ரிஷபம் :** குடும்பத்தின் செலவுக்கான பணத் தேவை அதிகரிக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**மிதுனம் :** அக்கம், பக்கத்தவர் உதவிகரமாக நடந்து கொள்வர்.

**கடகம் :** நீண்ட தூர வாகன பயணங்களில், சீரான ஓய்வு அவசியம்.

**சிம்மம் :** கடந்த காலத்தில் விலகியவர், அன்பு பாராட்டுவார்.

**கன்னி :** பேசும் வார்த்தையில் நிதானம், நற்பெயரை பாதுகாக்கும். புதியவர்களின் அறிமுகம், உதவி கிடைக்கும்.

**துலாம் :** உங்களின் ஆலோசனையை, அன்புக்கு உரியவர்கள் விரும்பி கேட்பர்.

**விருச்சிகம் :** பசு, பால் பாக்ய யோகம் மற்றும் முருகப் பெருமானின் நல்லருள் பலம் சிறப்பாக கிடைக்கும்.

**தனுசு :** உடன்பிறந்தவரின் செயல், மனவருத்தம் தரலாம். அக்கம், பக்கத்தவரின் அன்பு, உபசரிப்பு கிடைக்கும்.

**மகரம் :** பண வரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**கும்பம் :** சமூக நிகழ்வுகளில் இருந்து புதிய அனுபவம் பெறுவீர்கள்.

**மீனம் :** [illegible]. பணம் வசூலிப்பதில் ஆர்வம் கொள்வீர்கள். வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விளையாட்டு முரசு

## இன்று அஞ்சலியில் – இலங்கை வீரர்கள்

தலையில் பந்து பட்டதால் உயிரிழந்த அவுஸ்திரேலியாவை சேர்ந்த இளம் கிரிக்கெட் வீரர் பிலிப் ஹியூக்ஸுக்கு இலங்கை வீரர்கள் அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

இதன்படி இன்று சனிக்கிழமை கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டு மைதானத்தில் இங்கிலாந்துக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டாவது ஒருநாள் போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கை வீரர்கள் பிலிப் ஹியூக்ஸுக்கு மரியாதை செலுத்தும் முகமாக இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

மேலும் துக்கத்தை கடைப்பிடிக்கும் முகமாக கறுப்புப் பட்டி அணியும் கோரிக்கை நிலுவையில் உள்ளதாக, இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.




## மைல்கல்லை எட்டும் சங்ககார

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் சங்கக்கார 450 வீரர்களை ஆட்டமிழக்கச் செய்த விக்கெட் காப்பாளர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

## உடனடித் தடை

இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஷேர் ஹோல்டிங் பற்றிய விவரங்களை தருமாறும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை கட்டுப்படுத்துவது யார் என்ற விவரத்தை தெரிவிக்குமாறும் சீனிவாசனை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது. அத்துடன் ஐ.பி.எல் தொடரில் இருந்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் உரிமத்தை உடனடியாக நீக்க வேண்டும் எனவும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

## ரெனிஸ் - நம்பர் ஒன் - இலட்சியம்

டென்னிஸ் இரட்டையர் உலகத்தர வரிசையில் முதலிடத்தை பிடிப்பதே இலக்கு என இந்திய டென்னிஸின் நட்சத்திர வீராங்கனையான சானியா மிர்சா தெரிவித்துள்ளார். இளைஞர்கள் மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட சானியா இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.



டென்னிஸில் இருந்து ஓய்வு பெறுவதற்குள் டென்னிஸ் இரட்டையர் உலகத்தர வரிசையில் நம்பர் ஒன் இடத்தை பெறுவதே தனது லட்சியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தன்னால் தான் - மன உளைச்சலில்

பந்து தாக்கி உயிரிழந்த பிலிப் ஹியூக்சுக்கு பவுன்சர் பந்து வீசிய வேகப்பந்து வீச்சாளர் சீன் அபோட் மிகுந்த மன உளைச்சலில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



இந்த சம்பவம் அபோட் மனதில் அப்படியே பதிந்துள்ளது. அபோட் 22 வயதேயான இளைஞர் என்பதால் இந்த சம்பவத்தை இலகுவாக அவரால் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

எனவே பதறியபடியே ஹியூக்ஸை தூக்கிச் சென்ற வாகனத்தின் பின்னாலேயே ஓடிச் சென்றார். மருத்துவமனைக்கு சென்றும் நலம் விசாரித்தார். ஆனால் ஹியூக்ஸ் துரதிட்டவசமாக இன்று உயிரிழந்துள்ள நிலையில் அபோட் மேலும் அதிர்ச்சியடைந்துள்ளார்.

## சார்க் நாடுகளிடையே மின்சார பரிமாற்றம்

SAARC

நேபாள நாட்டின் தலைநகரான காட்மாண்டுவில் 'சார்க்' என்னும் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாடு நேற்று முன்தினம் தொடங்கியது. நேபாள பிரதமர் சுஷில் கொய்ராலா தலைமையில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் முக்கிய அம்சம், 'சார்க்' நாடுகளிடையே மின்சார பரிமாற்றத்துக்கான ஒப்பந்தம் கடைசி நிமிடத்தில் கையெழுத்தானதுதான். இந்தியா முன்மொழிந்த இந்த திட்டத்தை ஆரம்பத்தில் பாகிஸ்தான் எதிர்த்தது. பின் கடைசி நிமிடத்தில் ஏற்றுக் கொண்டது.

# சர்வதேசச் செய்திகள்

- **பாலகியை கொடுமைப்படுத்திய பெண் கைது**

2 வயது குழந்தையொன்றை பராமரிக்க நியமிக்கப்பட்ட பணிப்பெண்ணொருவர், அந்தக் குழந்தையை ஏறி மிதித்தும் அடித்தும் கொடுமைப்படுத்துவது கண்காணிப்பு வீடியோ கருவி மூலம் அம்பலமான சம்பவம் உகண்டாவில் இடம்பெற்றுள்ளது. ,தனை அடுத்து அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

- **தினமும் தவறாத கற்க வந்த நாய் கொலை**



சீனாவில் பிரபல பல்கலைக்கழகத்தில் தவறாமல் வகுப்புகளுக்கு வந்து பாடத்தை கவனித்த நாயை பல்கலைக்கழக அதிகாரிகள் விஷம் வைத்து கொன்றுள்ளனர்.

- **30 வருடங்களின் பின் சீனாவுக்கு**

இங்கிலாந்து அரச குடும்பத்தை சேர்ந்த இளவரசர் வில்லியம்ஸ் முதல் முறையாக அடுத்த ஆண்டு பிப்ரவரியில் சீனாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றனர். கடந்த முப்பது ஆண்டுகளாக இங்கிலாந்து அரச குடும்பத்தினர் யாரும் சீனாவுக்கு சுற்றுப்பயணம் செய்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கடைசியாக 1986ஆம் ஆண்டு இளவரசர் பிலிப் தனது மனைவியுடன் இங்கிலாந்து நாட்டுக்கு சுற்றுப்பயணம் செய்தார்.

- **முதல் பெண் தெரிவு – சானியா மிர்சா**



தெற்கு ஆசிய பிராந்தியத்துக்கான ஐக்கிய நாடுகளின் நல்லெண்ணத் தூதுவராக இந்திய டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்ஸா நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கியா நாடுகள் ஸ்தாபனத்தில் தெற்கு ஆசிய பெண் ஒருவர் தூதுவராக நியமிக்கப் பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

பெண்கள் மீதான வன்முறைகளுக்கு முடிவுகட்டும் சர்வதேச தின நிகழ்வின்போது ஐக்கிய நாடுகளின் பெண்கள் அமைப்பினால் சானியா நல்லெண்ணத் தூதுவராக நியமிக்கப்பட்டார்.

- **போலி துப்பாக்கியுடன் விளையாடிய சிறுவன் கொலை**

அமெரிக்காவில் கிளேவ்லாண்ட் நகரிலுள்ள விளையாட்டு மைதானமொன்றில் போலி துப்பாக்கியுடன் விளையாடிய 12 வயதுச் சிறுவன் ஒருவன் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான்.

- **ஒபாமா இந்திய விஜயம்**

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின்பேரில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா 2015 ஜனவரியில் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என இந்திய ஊடகம் செய்தி வெளிட்டு வருகின்றது.

- **ஐ.எஸ்.ஐ.எஸ் இன் சதித்திட்டம்**

அமெரிக்காவின் கறுப்பின போராளிகளை தங்கள் இயக்கத்தில் சேர்க்க ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

- **ஈராக்கிய சிறார்களுக்கு பயிற்சி**

ஐ.எஸ். போராளிகள் சின்னஞ்சிறார்கள் இராணுவப் பயிற்சிகளுக்கு உட்படுத்தப்படுவதை வெளிப்படுத்தும் புதிய வீடியோ காட்சியொன்றை வெளியிட்டுள்ளனர்.

- **தந்தையை வெட்டிக் கொன்ற இளைஞர்**

பிரித்தானியாவை சேர்ந்த நாதன் (27) என்ற இளைஞர் தனது தந்தை ராபின்சனை (48) துண்டு துண்டாக வெட்டி உறுப்புகளை தொலைக்காட்சி ஸ்டாண்டாக உபயோகப்படுத்தியுள்ளார். இவர்கள் இருவரும் தங்கள் குடியிருப்பு கட்டடத்தில் ஒன்றாக தான் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் இருவருக்குமிடையில் நடந்த மோதலில் இவ்வாறு கொடூரமாக கொலை செய்துள்ளார். இது தொடர்பாக கைது செய்யப்பட்ட இவர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

- **பிரான்ஸில் உம் உலகப் போர் வெடிகுண்டு வெடிக்காமல் கண்டுபிடிப்பு**

பிரான்ஸில் மேற்குப் பகுதியில் பிரிட்டெய்ன் எனும் இடத்தில் புதிதாக மெட்ரோ ரயில் பாதை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. அப்போது இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட 250 கிலோ எடையுள்ள வெடிக்காத வெடிகுண்டு ஒன்றைக் கண்டுபிடித்தனர். இதுகுறித்து அந்நகரத்தின் மேயர் நதாலி அப்பெர் கூறும் போது, "இந்த வெடிகுண்டை செயலிழக்கச் செய்வது நிபுணர்களுக்கு மிகவும் கடினமான பணியாக இருந்தது. காரணம் இது இன்றைய வெடிகுண்டுகளைப் போல "ரோடியோ கன்ட்ரோல்" குண்டுகள் அல்ல. கருவிகளின் துணையில்லாமல் மனிதக் கைகளாலேயே இந்த குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது" என்றார். இதை முன்னிட்டு அந்நகரத்தில் உள்ள மக்கள் எல்லோரும் காலை 9 மணி அளவில் அந்நகரத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். உலகப் போர்களின் போது இந்த நகரம் பல முறை குண்டுவீச்சுக்கு இலக்கானது குறிப்பிடத்தக்கது.

- **கைதிகள் இறந்தது எவ்வாறு?**

வெனிசுலா நாட்டில் உள்ள லாரா என்ற மாநிலத்தில் யுரிபனா என்ற பெயரில் ஒரு சிறை உள்ளது. இங்கு பல்வேறு வழக்குகளில் சிக்கிய ஏராளமான கைதிகள் தண்டனை அனுபவித்து வருகின்றனர். இங்குள்ள கைதிகளை, சிறை அதிகாரிகளும், காவலர்களும் கண்மூடித்தனமாக தாக்கி துன்புறுத்துவதாக குற்றம் சாட்டப்பட்டு வந்தது. இதனை கண்டித்து கைதிகள் அனைவரும் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் தொடர் உண்ணாவிரதம் நடத்தினர்.

இந்தநிலையில் உண்ணாவிரதம் இருந்த கைதிகளில் 17 பேர் திடீரென அடுத்தடுத்து மரணம் அடைந்ததால் அந்த சிறைச்சாலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. . இதுகுறித்து சிறை அதிகாரிகள் கருத்து கூறும்போது கைதிகள் பயன்படுத்திய மருந்து பொருளில் விஷம் கலந்திருந்ததால் அவர்கள் இறந்ததாக தெரிவித்து உள்ளனர். ஆனால் சிறை அதிகாரிகள்தான் விஷம் வைத்து கைதிகளை கொன்றதாக கைதிகள் தரப்பில் இருந்து புகார் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து விசாரணை நடத்த வெனிசுலா அரசு உத்தரவிட்டுள்ளது.

- **ஓரினச் சேர்க்கை அனுமதி**




உலக முஸ்லிம் அழகுராணி போட்டி இந்தோனேசிய யொக்யகர்த்தா நகரில் இடம்பெற்ற போது அழகுராணியாக தியூனிஸிய அழகுராணி பத்மா பென் முடி சூட்டிக்கொண்டார்.


- **4 வயதிலிருந்தே மொடல்**



ரஷ்யாவின் தலைநகர் மோஸ்கோவை சேர்ந்த கிரிஸ்டீனா பீமினோவா (9) என்ற சிறுமி தனது 4 வயதிலிருந்தே மொடல் அழகி போட்டிகளில் பங்கேற்க தொடங்கியுள்ளார். உலகின் மிக அழகிய இளம் வயது மொடலாக கருதப்படும் இவருக்கு பேஸ்புக்கில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட ரசிகர்கள் உள்ளனர். ஆனால் இவரை பிடிக்காத சில நபர்கள், இவரின் புகைப்படங்களை மோர்ப்பிங் செய்து அரைநிர்வாண படங்களாய் சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைத்தங்கல் முகாம்கள் நகர்த்தப்படுமா?



சம்பூரில் இருந்து இடம்பெயர்த்தப்பட்ட மக்கள் தற்போது தங்கியிருக்கும் இடைத்தங்கல் முகாம்களில் இருந்து அவர்களை வேறு இடங்களுக்கு நகர்த்தும் நடவடிக்கையொன்று நடைபெறுவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

சம்பூரில் இருந்து நகர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த முடியாதெனத் தெரிவித்துவரும் அரசு அவர்கள் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் தங்கிடங்களை மூதூரின் மூன்று பிரதேசங்களில் உருவாக்கி வைத்துள்ளது.

அவை முறையே பட்டித்திடல், கிளிவெட்டி மற்றும் மணற்சேனை ஆகியவையாகும். இவ்விடைத்தங்கல் முகாம்கள் யாவும் மட்டு-திருமலை பிரதான பாதையோரத்தில் அமைந்துள்ளன. 13

## இடைத்தங்கல் முகாம்களுக்கு நிதி ஒதுக்குங்கள்

-தண்டாயுதபாணி-



(அச்சுதன்)

பட்டித்திடல், மணற்சேனை, கிளிவெட்டி ஆகிய அகதி முகாம்களில் தங்கியிருக்கின்ற சம்பூர் அகதிகள் தற்போதைய மழை காலத்தில் மிகப்பெரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். மழை நீர் வழிந்தோட முடியாத நிலையில் அவர்களது முகாம்களின் சூழலும், நடைபாதைகளும் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது. இதனால் அங்கு வாழுகின்ற மக்கள் குறிப்பாக குழந்தைகள் 13

## களியாட்ட நிகழ்வுகள் நடைபெறமாட்டாது

இராணுவத்தினரால் திருகோணமலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து களியாட்ட மற்றும் சாகச நிகழ்வுகள் நடைபெற மாட்டாது என இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

## வினாயகர் ஆலயப் பானையை படையினர் உடைக்கவில்லை

திருகோணமலை, மூதூர் முன்னம்போடிவெட்டை கிராமத்தில் உள்ள விநாயகர் ஆலயத்தில் கடந்த 26ம் திகதி நேர்த்திக் கடன் பூசைக்காக வைக்கப்பட்ட பொங்கல் பானையை புலனாய்வுத்துறையினர் கிணற்றுக்குள் போட்டு அட்டகாசம் செய்துள்ளதாக வெளியான செய்திகள் உண்மையில்லை எனத் தெரியவந்துள்ளது.


இவ்விடயம் தொடர்பாக உரியவர்களைத் தொடர்பு கொண்ட போதே தமிழ்ப் புலனாய்வாளர்கள் இருவர் ஆலய முன்றலுக்கு வந்து நடைபெறும் பூசை தொடர்பான விடயங்களைச் சேகரித்துவிட்டு ஒலிபெருக்கியைப் பாவிக்க வேண்டாம் என வலியுறுத்திச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

## தனிமாவட்டத்திற்கு எதிர்ப்பு - கல்முனை நகரசபையில் தமிழ் அங்கத்தவர்கள் புறக்கணிப்பு

கல்முனை மாநகரசபையில் உபகுழுக்களுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான விசேட அமர்வு இடம்பெற்ற போது வழமைக்கு மாறான முறையில் தமிழர்களை புறம்தள்ளி நிதிக்குழுவில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்யப் பட்டுள்ளதாக மாநகரசபை உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கல்முனையில் வாழ்கின்ற சுமார் 30000 இற்கு மேற்பட்ட தமிழர்களின் இருப்பு அபிவிருத்தி மற்றும் நலநோம்பு செயற்பாடுகள் அனைத்தையும் இல்லாமல் செய்ய வேண்டும் எனும் ஒரு வன்மநோக்கத்துடன் நன்கு திட்டமிட்டு முதல்வர் நிசாம்காரியப்பர் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸினர் செயற்பட்டமை கவலையடைய வைத்துள்ளதுடன். இனத் துவேசத்தின் உச்சநிலையாகவும் உள்ளதாகத் தெரிவித்துள்ளனர். 13

## காணி உறுதிக்குப் பதிலாகக் கடிதம் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்



திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலகப் பரப்பினுள் உள்ளடங்கும் அபயபுரம், செல்வநாயகபுரம், அன்புவழிபுரம், லிங்கநகர், இலுப்பைக்குளம், சாம்பல்தீவு போன்ற கிராமங்களைச் சேர்ந்த நானூறுக்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு காணி உறுதி வழங்குவதாக அழைத்துச் சென்று கடிதமொன்றை வழங்கித் திருப்பியனுப்பிய நிகழ்வு கடந்த 27ம் 13

## கிழக்கில் த.தே.கூவின் இருவர் கட்சி தாவினர்

கிழக்கு மாகாணத்தில் நேற்றுவரை இரண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கட்சி தாவியுள்ளனர்.

சேருநுவர பிரதேசசபை உறுப்பினர் ஒருவரும் ஆலையடி வேம்பு பிரதேசசபை உறுப்பினர் ஒருவருமே ஐ.ம.சு.முவிற்கு மாறியுள்ளனர்.

## மட்டு கடுகதியை மோதிய பெக்கோ இயந்திரம்

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதிப்புகையிரதம் 22ம் திகதி மாலை 1 மணியளவில் திம்பிரியாகெதர சந்தியில் பணியில் இருந்த பெக்கோ இயந்திரத்துடன் மோதியதில் தொடர்ந்து பயணிக்க முடியாத நிலையை அடைந்துள்ளது.

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான பெக்கோ இயந்திரத்துடனேயே விபத்தடைந்த தொடரூந்தை மாகோவில் இருந்து அழைக்கப்பட்ட மற்றொரு எந்திரம் இழுத்துச் சென்றதாகவும் அதன் பின்னர் திருத்தப்பட்ட கடுகதிப் புகையிரதம் கொழும்பிற்குச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது. (அருணன்)





## மீள் குடியேற்றப்பட்ட எமக்கு அடிப்படை வசதிகள் இல்லை

### பிரதி அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா?



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பேரணியொன்றை 26ம் திகதி முன்னெடுத்திருந்தனர்.

மீள்குடியேற்றப்பட்டுள்ள தமக்கு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல வேறு பிரச்சினைகள் காணப்படுவதாக அவர்கள் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜரொன்றையும் கையளித்துள்ளனர்.

செங்கலடி - பதுளை வீதியிலுள்ள வெலிகாகண்டி கோப்பாவெளி, உறுகாமம், கித்துள், தும்பாலஞ்சோலை சர்வோதயநகர் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களே இந்த பேரணியை முன்னெடுத்திருந்தனர்.

மலைமுரசு
MALAIMURASU
மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 29.11.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா?
செய்திகளை எமக்குச் சொல்லுங்கள்
நாங்கள் மீள் நிரப்புகின்றோம்
0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org